பலூன்களின் மிகவும் பொதுவான பயன்பாடு அறிவியல் ஆராய்ச்சியில் உள்ளது. ஒரு வகையில், விண்வெளி யுகம் உதயமாவதற்கு முன்பே, கருவிகள் பொருத்தப்பட்ட பலூன்கள் செயற்கைக்கோளின் செயல்பாடுகளைச் செய்ய முடிந்தது. மேம்பட்ட செயற்கைக்கோள்களின் காலங்களில் கூட, பலூன்கள் மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படும் சூழ்நிலைகள் உள்ளன. காற்றின் வெப்பநிலை, அழுத்தம், காற்றின் வேகம் மற்றும் திசை, ஏரோசல் செறிவு போன்ற அளவீடுகளைச் செய்ய வானிலை ஏஜென்சிகள் வழக்கமாக பலூன்களைப் பயன்படுத்துகின்றன.




இன்றைய ராட்சத பலூன்கள் அடையக் கூடிய உயரம் காரணமாக, அவை வானியற்பியல் வல்லுநர்களுக்கும் விண்வெளி நிறுவனங்களுக்கும்கூட பயனுள்ளதாகக் கருதப்படுகின்றன. இவை ஒப்பீட்டளவில் தெளிவான இடங்களாகும் விமானங்கள் பறக்கும் உயரத்திற்கு மிக அதிகமாகவும் பூமியிலிருந்து 200 கி.மீ தொலைவில் உள்ள சுற்றுப்பாதைகளுக்கு மிகக் கீழே, செயற்கைக்கோள்கள் வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவை பூமியின் குறிப்பிட்ட பகுதிகளை அவதானிக்க சிறந்த வாய்ப்புகளை வழங்குகின்றன. செயற்கைக் கோள்களை விட ஆயிரக்கணக்கான மடங்கு மலிவானவை.

பலூன்கள் அவற்றின் வேலை முடிந்ததும் கீழே கொண்டு வரப்படுவதால், பயன்படுத்தப்பட்ட கருவிகள் மீட்டெடுக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன. நாசா ஒரு முழு அளவிலான பலூன் திட்டத்தைக் கொண்டுள்ளது, இது ஒவ்வொரு ஆண்டும் நான்கு அல்லது ஐந்து ஏவுதல்களைச் செய்கிறது. பல பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆராய்ச்சிப் பணிகளுக்கு பலூன்களைப் பயன்படுத்துகின்றன. பலூன் அடிப்படையிலான சோதனைகள் 1936 மற்றும் 2006 இல் இயற்பியலுக்கான குறைந்தபட்சம் இரண்டு நோபல் பரிசுகளைப் பெற்றுள்ளன.

உயரமான பலூன்கள் உளவு நடவடிக்கைகளுக்கு தூண்டும் வாகனங்கள், இருப்பினும் அவற்றின் பயன்பாடு மிகவும் பொதுவானதாகத் தெரியவில்லை.

ட்ரோன்கள் மற்றும் செயற்கைக்கோள்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. உளவு விமானங்கள் முதலாம் உலகப் போருக்குப் பிறகு பயன்பாட்டில் உள்ளன. ஆனால், இங்கே மீண்டும் பலூன்கள் சில நன்மைகளைக் கொண்டுள்ளன. அவர்கள் ஒரு பகுதியில் நீண்ட நேரம் வட்டமிட முடியும்.

மிகப்பெரிய நன்மை என்னவென்றால், அவர்கள் கண்டறியப்படாமல் இருப்பதற்கான அதிக வாய்ப்பு. அவற்றின் ஒப்பீட்டளவில் மெதுவாக இயக்கம் காரணமாக, பலூன்கள் பெரும்பாலும் பாதுகாப்பு ரேடார்களால் பறவைகளாகப் பார்க்கப்படுகின்றன. இதனால் கவனத்தைத் தவிர்க்கின்றன. உண்மையில், மெதுவாக நகரும் பொருட்களைக் கண்டறிய அதன் ரேடார் அமைப்புகளை மறுசீரமைப்பதாக அமெரிக்கா இப்போது கூறியுள்ளது.

பலூன்களில் ஒரு விமானம், ட்ரோன் அல்லது செயற்கைக்கோள் ஆகியவற்றின் அதிநவீன வழி செலுத்தல் அமைப்புகள் இல்லை, அவை காற்றின் வேகம் மற்றும் திசையின் கருணையின் அடிப்படையில் உள்ளன. பெப்ரவரி 4 ஆம் திகதி சுட்டு வீழ்த்தப்பட்ட பலூனில் ஒரு சோலார் பேனல் இணைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது ஒரு உள் உந்து சாதனத்தை இயக்குவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. ■




# உயிரைக் கையில் பிடித்தபடி

தாங்கமுடியாத வயித்துக்குத்து கனகாலத்துக்குப் பிறகு கோழி இறைச்சி சாப்பிட்டதால் வந்த குத்து என நினைத்து கை மருந்து பாவித்தும் நிற்கவில்லை. மாலையில் மந்திகைக்குப் போய் மருந்து எடுத்தும் இரண்டு நாட்களாக வயித்துக்குத்து நிற்கவில்லை. மூன்றாம்நாள் மந்திகையில் காட்டியபோது கல் அல்லது யூரினில் கிருமி என வார்ட்டில் அனுமதித்தார்கள்.

“ஐயா காலையில் ஸ்கான் எடுக்க வேணும், எக்ஸ்ரே எடுக்க வேணும் ஒண்டும் சாப்பிடாதையுங்கோ” என சொன்னார்கள். விடிந்ததும் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அவரையும் இன்னும் சிலரையும் ஒருவர் அழைத்துக்கொண்டு போனார். அங்கு இன்னும் பலர் இருந்தார்கள். பெயர் சொல்லி அழைத்தார்கள். தனது பெயர் கூப்பிடப்படும் என அவர் ஒவ்வொரு முறையும் எதிர்பார்த்து ஏமாந்தார். 12 மணி நெருங்கியது. அவர் மட்டும்தான் இங்கு இருந்தார். தன்னைக் கூப்பிடவில்லை என அவர் அங்கிருந்தவர்களிடம் சொன்னார். பெயரைக் கேட்டார்கள். அவர் பெயரில் அங்கு ரிக்கெற் இல்லை என்றார்கள். வார்ட்டுக்குப் போய் கேட்டபோது எவரும் முறையான பதிலைச் சொல்லவில்லை.

“பைபாஸ் செய்தது, நேரத்துக்கு மருந்து போட வேணும் சாப்பிட வேணும்” என தனது நிலையைக் கூறினார்.

டொக்டர் பார்த்துவிட்டு ஐந்து நாட்கள் ஊசிக்கு எழுதினார். நான்கு ஊசிகள் போடப்பட்டுவிட்டது. ஐந்தாவது நாள் ஊசியுடன் வீட்டுக்குப் போகலாம் என அவர் மகிழ்ச்சியடைந்தார். ஐந்தாவது நாள் அதிகாலை ஐந்தரை மணிக்கு ஊசி போட வேண்டும் எனக் கூறப்பட்டதால் கட்டிலில் படுத்தார். ஊசி போட்டு மருந்து முற்றாக ஏறுவதற்கிடையில் அவரின் வாய் கனத்தது. ஊசி போட்டு முடிந்ததும் தலை சுற்றியது. அவசர அவசரமாக மனைவிக்கும் தமையனுக்கும் தனக்கு ஏதோ செய்வதாக அறிவித்தார். அவர்கள் சென்றபோது அவரைச் சுற்றி பலர் நின்று அவசர சிகிச்சை செய்தார்கள். என்ன நடந்ததெனக் கேட்டபோது நான்கு நாளாக போட்ட ஊசி இல்லை. வேறு ஊசி போட்டது எனச்சொன்னார்கள்.

“மெகா சீரியலா நடத்துறியள். ஊசி இல்லை எண்டால் விட வேண்டியதுதானே. முதல்போட்ட ஊசி என்ன பிறகுபோட்ட ஊசி எது” என அவரின் மனைவி கேட்டார். டொக்டர் எழுதித்தான் ஊசி போட்டதாக சொல்லப்பட்டது.

“ஒரு சில மருந்துகள் இவருக்கு ஒத்துக்கொள்ளாது. அவற்றை கொப்பியைப் பார்த்தால் தெரியும்தானே” எனக் கூறிய மனைவி, மருத்துவம் சம்பந்தமான சில கேள்விகளைக் கேட்டார். தானும் தனது கணவனும் இதே வைத்தியசாலையில் வேலை செய்து ஓய்வு பெற்றதாகச் சொன்னார்.

மாற்று ஊசி போட்டிருப்பதாகவும் பின்னேரம் கண் விழித்து விடுவார் பயப்பட வேண்டாம் என டொக்டர் சொன்னார். சுகமாக இருந்த மனிசனை படுக்கையில் கிடத்திப் போட்டு பயப்படவேண்டாம் எண்டால் எப்படி




பயப்படாமல் இருப்பது என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

அவர்கள் பதற்றப்பட்டுக்கொண்டிருக்கையில் கடமை தவறாத பாதுகாப்பு உத்தியோகத்தர் விரட்டினார். நிலைமை தெரியாமல் வாயைக் கொடுத்த அவருக்கும் அர்ச்சனை விழுந்தது.

மாலை நான்கு மணிக்கு அவர் பேசத் தொடங்கிவிட்டார். ஆனாலும் தலைச்சுற்று நிற்கவில்லை. உசாராக இல்லை. மெதுவாகவே பேசினார். மிகவும் பலவீனமாகிவிட்டார்.

மறுநாள் காலையில் நீங்கள் இன்றைக்குப் போகலாம் என்றார்கள். அவர் சம்மதிக்கவில்லை. என்னாலை ஏலாது நடக்கவே முடியாது நான் போகமாட்டன் என்றார். இரண்டு நாட்களின் பின்னர் வீட்டுக்குச் சென்றார். சம்பவம் நடைபெற்ற ஒருவாரமாகி விட்டது. அவர் இன்னமும் பழைய நிலைக்கு வரவில்லை. ■

செ. நாதன், கரவெட்டி

# ஏன் கட்ட வேண்டும் வரி?

## எதற்காக கட்ட வேண்டும் வரி?

காணி, வீடு, பயன்தரு மரங்கள் அனைத்துக்கும் வரி கட்டவேண்டும். கிராமசபை, பட்டினசபை இருந்த காலங்களில் சோலை வரி எனச்சொல்வார்கள். இப்போது ஆதன வரி என்ற பெயரில் அறவிடப்படுகிறது. சொந்தக் காசில் அல்லது கடன்பட்டு வீடு கட்டினால் ஏன் வரி கட்ட வேண்டும். வீட்டிலே மரம் வளர்க்கும்படி அரசாங்கம் சொல்கிறது. கிராம சேவகரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மரக்கன்றுகளைத் தந்து வளர்க்க ஊக்குவிக்கிறார்கள். கார்த்திகை மாதத்தை மரம் நடுகை மாதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மரங்களுக்கு வரி கட்டவேண்டுமாம்.




இந்த நேரத்தில்தான் வீரபாண்டிய கட்டபொம்மன் மாதிரி ஏன் கட்ட வேண்டும் வரி எனக் கேள்விகேட்கத் தோன்றுகிறது.

ஆதன வரி அறிவித்தல் வீட்டிலே கொடுக்கப்பட்டது. அந்த அறிவித்தலில் வீட்டுக்காரரின் பெயரில்லை. குடியிருப்பாளரின் பெயருக்குப் பதிலாக The owner எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெயர் இல்லாமல் வரி கட்டும்படி கடிதம் அனுப்பி உள்ளீர்கள். பெயர் இல்லாமல் எப்படிக் கட்டுவது என பிரதேச சபைக்குச் சென்று விசாரித்தபோது உங்களுடைய பெயர் இல்லாமல் ஏன் வாங்கினீர்கள் என என்மீது குற்றம் சுமத்தி கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. வீட்டிலே நான் நிற்கவில்லை சின்னப் பிள்ளையள்தான் நின்றார்கள் எனச்சொன்னேன்.

“The owner” என எழுதியுள்ளீர்கள் இந்த அறிவித்தல் எனது காணிக்குரியது என எப்படி உறுதிப்படுத்துவது எனத் திருப்பிக் கேட்டேன்.

அடையாளம் தெரியாத காணியளுக்கு அப்படித்தான் போடுவது எனப் பதில் வந்தது.

அடையாளம் தெரியாத காணி எண்டால் அதை நீங்கள்தானே அடையாளப்படுத்த வேண்டும் என்றேன்.

உங்களுடைய காணி இங்கே பதியப்படவில்லை. பதிஞ்சிருந்தா பெயர் இருக்கும் என்றார்கள்.

இங்க பதிந்தனான், எனப் பெயரைச் சொன்னேன். தேடிப் பார்த்துவிட்டு பெயர் இருக்கிறது. ‘வலுவேசன் டிப்பார்ட்மென்ட்’ தான் இதுக்குப் பொறுப்பு. அவர்களுக்கு நாங்கள் உங்களுடைய பெயர் கொடுத்தனாங்கள். அவைதான் பிழை விட்டிட்டினம் என்றார்கள்.

2022 ஆம் ஆண்டு வரி கட்டினனான். அதுவும் கட்டேல்லை எண்டு போட்டிருக்கு. ஒரே ஒரு காணிதான் இருக்கு அதுக்கு எப்படி இரண்டு ஆதன இடாப்பு இலக்கம் போட்டு அனுப்புவீங்கள் எனக் கேட்டபோது மாறித் தந்திட்டினம் போல என்றார்கள்.

மாறித் தந்திட்டினம் எண்டு முறைப்பாடு செய்யச்சொன்னவங்கள். அது எனது வேலை அல்ல. என்னுடைய பெயர் இருக்குத்தானே அந்தப் பெய ரோடு அனுப்புங்கோ வரியைக் கட்டுறன் எண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன். ■

கே.ரமா, நெல்லியடி

# என்ன பிரச்சினை



உங்களைச் சுற்றி நடக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு தீம்புனல் தயாராக இருக்கிறது. உங்கள் பிரச்சினைகளை எழுதி தீம்புனல்,
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி எனும் முகவரிக்கு அல்லது theempunal@gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

# கலை, இலக்கிய, மனித உரிமை ஆர்வலர் தன்னார்வத் தொண்டர் லயனல் போப்பகே!

26 முதல் சந்திப்பு

முருகபூபதி



இலங்கை சுதந்திரம்பெற்ற பின்னர் 1971 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடந்த சிங்கள இளைஞர்களின் ஆயுதக்கிளர்ச்சியை மறந்திருக்க மாட்டீர்கள்.

பல்கலைக்கழக மாணவர்களும் படித்துவிட்டு வேலைவாய்ப்பில்லாமல் அவதியுற்ற ஏழை - மத்திய தர இளைஞர்களும் தென்பகுதியில் முன்னெடுத்த அந்தப் போராட்டம் குறுகிய காலத்தில் அரசின் தீவிர அடக்குமுறையினால் முறியடிக்கப்பட்டது.

அப்போது கைதானவர்கள்தான் ரோகண விஜேவீரா, லயனல் போப்பகே, டி.ஐ.ஜி.தர்மசேகர, விக்டர் ஐவன், உபதிஸ்ஸ கமநாயக்க முதலான இளைஞர்கள்.

இவர்களில் ரோகண விஜேவீரா, ரஷ்யாவில் லுமும்பா பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு திரும்பியிருந்தவர். லயனல் போப்பகே பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் படித்தவர்.

இந்தப்பெயர்களை, அன்றைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க - என்.எம்.பெரேரா - பீட்டர் கெனமன் ஆகியோரின் (ஸ்ரீல. சுதந்திரக்கட்சி - சமசமாஜக்கட்சி - கம்யூனிஸ்ட்கட்சி) கூட்டரசாங்கத்தின் காலத்தில் நீதியரசர் அலஸ் தலைமையில் நடந்த குற்றவியல் நீதி ஆணைக்குழுவின் விசாரணைகளின்போது வெளியான செய்திகளிலிருந்து அறிந்திருந்தேன்.

தோழர் பாலாதம்பு குறிப்பிட்ட அரசியல் கைதிகளுக்காக வாதிட்டார். எனினும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நீண்ட காலம் சிறையிலிருந்தனர். கிளர்ச்சி நடந்தபோது ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலரது சடலங்கள் மாணிக்க கங்கையிலும் களனி கங்கையிலும் மிதந்தன.

கதிர்காமத்தில் நடந்த சித்திரைப் புத்தாண்டு விழாக்களில் அழகுராணியாக தெரிவுசெய்யப்பட்டிருந்த பிரேமாவதி மனம்பேரி, அந்த புனித பிரதேசத்தில் ஒரு இராணுவ அதிகாரியினால் மானபங்கப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தப்பெண்ணின் கதையை சித்திரிக்கும் “கங்கை மகள்” என்ற சிறுகதையை பின்னாளில் எழுதியிருக்கின்றேன்.

இச்சிறுகதை “கங்காவே துவெணிய” என்ற தலைப்பில் சிங்களத்திலும் வெளிவந்துள்ளது. அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் எனக்கோரும் இயக்கத்தில் நானும் இணைந்திருந்தேன்.

இவ்வியக்கம், கொழும்பில் மலே வீதியில் அன்றைய கல்வி அமைச்சிற்கும் பரீட்சைத்திணைக்களத்திற்கும் அருகில் இயங்கிக்கொண்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பணிமனையில் தோழர் லீனஸ் திஸாநாயக்கவால் முன்னெடுக்கப்பட்டது. அந்த இயக்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தோழர் சண்முகதாசன், வாசுதேவ நாணயக்கார, குமாரி ஜயவர்தன, தினேஷ் குணவர்தன (இன்றைய பிரதமர்) ஆகியோருடைய பெயர்களுடன் எனது பெயரும் இடம்பெற்றிருந்தது.

குறிப்பிட்ட இலங்கை ஆசிரியர் சங்க பணிமனையில் நானும் சிறிது காலம் வேலை செய்தேன். அச்சங்கம் வெளியிட்ட ஆசிரியர் குரல் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் இணைந்திருந்தேன். தற்போது இங்கிலாந்தில் வதியும் தோழர் காதர், எமக்கு அரசியல் வகுப்பு நடத்தி, சுயநிர்ணய உரிமை பற்றிய விளக்கங்கள் அளிப்பார்.




1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இடதுசாரிக்கட்சிகள் படுதோல்வியடைந்து, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் சுதந்திரக்கட்சியும் மிகக் குறைந்த ஆசனங்களையே பெற்றது.

அதனால், தமிழர் விடுதலைக்கூட்டணி பிரதிநிதியான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற அறப் போராட்டம் தொடர்ந்தது. ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் பிரச்சாரத்தின் போது, அரசியல் கைதிகளை விடுவிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது.

இக்கட்சிக்கு அந்தத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை கிடைத்தமையால் கண்டி, யாழ்ப்பாணம், கொழும்பு சிறைகளிலிருந்த சகல அரசியல் கைதிகளும் விடுதலையானார்கள்.

அவ்வாறு விடுதலையானவர்களில் ஒருவர்தான் தோழர் லயனல் போப்பகே.

வீரகேசரியில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 1978 ஆம் ஆண்டு ஒருநாள் மாலை அலுவலகத்தின் வாயிலில் கடமையிலிருந்தது பாதுகாப்பு ஊழியரிடமிருந்து, என்னைப்பார்க்க ஒருவர் வந்திருப்பதாக தகவல் வந்தது. சென்று பார்த்தேன்.

தன்னை லயனல் போப்பகே எனச்சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டு, கைகுலுக்கினார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அப்போதைய தலைவர் எச்.என். பெர்னாண்டோவும் செயலாளர் சித்ராலும் என்னைப்பற்றி தம்மிடம் சொல்லியிருப்பதாகக் கூறினார்.

எச்.என்.பெர்னாண்டோவின் தங்கையைத்தான் தோழர் ரோகண விஜேவீரா மணம்முடித்தார்.

இவ்வாறு 1978 ஆம் ஆண்டு முதல் முதலில் எனக்கு அறிமுகமான தோழர் லயனல், 45 வருடகாலமாக எனது ஆழ்ந்த நேசத்திற்கும் நெருங்கிய தோழமைக்குமுரியவராக விளங்குகிறார். இவரது தலைமையில் 1983 ஆம் ஆண்டு நடந்த மே தின ஊர்வலத்தையும் மாபெரும் கூட்டத்தையும் பார்த்து, அன்றைய ஜே.ஆரின் அரசு கதிகலங்கியது.

தருணம் பார்த்திருந்த ஜே.ஆர் 1983 நடுப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியை தடைசெய்தார். அதனால், லயனல் போப்பகே மீண்டும் கைதாகி தடுத்துவைக்கப்பட்டார். பின்னர் விடுதலையாகி ஜப்பான் சென்ற லயனல், அங்கிருந்து அவுஸ்திரேலியா வந்து, படித்துக் கலாநிதிப்பட்டமும் பெற்றார்.

அன்று 45 வருடங்களுக்கு முன்னர் இவரது அழைப்பினை ஏற்று மக்கள் விடுதலை முன்னணியின் செஞ்சக்தி பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்றியதுடன், மொழிபெயர்ப்புகளையும் செய்து கொடுத்தேன்.

குறிப்பிட்ட செஞ்சக்தி இதழில் கவிஞர் புதுவை ரத்தினதுரையின் கவிதைளும் இடம் பெற்றுள்ளன.

தோழர் லயனல் போப்பகே, கலை, இலக்கிய ஆர்வலர். அத்துடன் அரசியல் கட்டுரைகளும் எழுதுபவர்.

இந்த ஆற்றல்களை பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற போதும் 1971 முதல் சிறைவாசம் அனுபவித்த காலத்திலும் வளர்த்துக்கொண்டவர்.

சிறையிலிருந்த காலத்தில் பாடல்கள் இயற்றி, வெற்றுத்த கரடின்கள், தண்ணீர் அள்ளும் வாளிகள் ஆகியனவற்றைப் பயன்படுத்தி இசை எழுப்பி சிறையிலிருந்த சக தோழர்களுடன் பாடியவர். அதற்கு விடுதலைக்கீதம் எனத் தலைப்பிட்டிருந்தார்.

விடுதலையாகி வந்த பின்னர், என்னிடமும் சில பாடல்களைத் தந்து தமிழ்ப்படுத்தி இசையோடு பாடினார். விடுதலைக்கீதம் இசை நிகழ்ச்சி 1978 முதல் 1983 வரையில் இலங்கை எங்கும் நடந்தது.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி, ஃபீனிக்ஸ் பறவையைப்போன்று எழுச்சி பெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் இந்த இயக்கம் 1971 கிளர்ச்சியில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக நடத்தும் மாபெரும் கூட்டங்களில் விடுதலைக்கீதம் பாடல்களும் இடம்பெறும்.

அதில் “வேலுப்பிள்ளை அண்ணா என்னை மன்னிப்பாய்” என்ற பாடல் பிரசித்தம். இதனை இயற்றியவரும் பாடியவரும் தோழர் லயனல் போப்பகேதான். இவருடைய மனைவி சித்ராவும் சிறந்த பாடகி.

தற்போது அவுஸ்திரேலியா மெல்பனில் குடும்பத்தினருடன் வதியும் தோழர், மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் தன்னார்வத்தொண்டராகவும் இயங்கியவாறு, இன ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டுக்கும் குரல் கொடுத்து வருவதுடன், சிறந்த தமிழ் அபிமானியாகவும் விளங்குகிறார்.

இவர்பற்றி மைக்கல் கொலின் என்ற எழுத்தாளர், “THE LIONEL BOPAGE STORY” என்ற 565 பக்கங்கள் கொண்ட விரிவான நூலை எழுதியுள்ளார்.

அண்மையில் இலங்கை 75 ஆவது சுதந்திர தின விழாவை கொண்டாடியபோது, லயனல் “இலங்கையின் தற்போதைய நெருக்கடிக்கும் 1971 நிலவரத்துக்கும் இடையிலான ஒற்றுமைகள் மீது ஒரு சிந்தனை” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களில் வெளியானது என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

## 57

ரமணி

மௌனமாக வெளியான திரைப்படங்கள் ஆரம்பத்தில் பாடல்களுக்காக ஓடின. 50 சங்கீதங்கள் (பாடல்கள்) உள்ள படம் என்றே விளம்பரப்படுத்தினார்கள். பாடல்கள் கோலோச்சிய காலத்தில், வெளியான பராசக்தி படம் வசனங்களை முதன்மைப்படுத்தியது. கலைஞர் கருணாநிதி, இளங்கோவன் போன்றவர்களின் வசனங்களை மக்கள் ரசிக்கத் தொடங்கினார்கள்.

ரசிகர்களின் பார்வை மாறத் தொடங்கியதால் நடிகர் முன்னிலை பெற்றார். பாடலாசிரியர், பாடகர், இயக்குநர், இசையமைப்பாளர் என மக்களின் ரசனை மாறத்தொடங்கியது.

ஐம்பதுகள் தொடங்கி எழுபதுகள் வரையிலும் குடும்பக் கதைகளின் பொற்காலமாக விளங்கியது தமிழ் சினிமா. அதில், அண்ணன் - தங்கையின் பாசத்துக்கும் எதன்பொருட்டும் அறுபடாத அதன் தொடர்ச்சிக்கும் தமிழ்ப் பண்பாட்டில் தரப்பட்டிருக்கும் இடம் எவ்வளவு உன்னதமானது என்பதை உணர்ச்சிக் குவியலாக முன்வைத்த படம் 'பாசமலர்'.

தமிழர் மனதில் ஒரு கறுப்பு வெள்ளை கல்வெட்டுச் சினிமாவாக மாறிப்போய்விட்ட அதன் வெற்றியில் ஆரூர்தாஸின் வசனத்துக்கு மிகப் பெரிய இடமுண்டு. இளமையும் எளிமையும் இலக்கிய நயமும் அக்கால கட்டத்தின் வாழ்க்கையும் மிகுந்திருந்த 'பாசமல'ரின் வசனத்துக்குக் கிடைத்த வரவேற்பால், தனிப்பெரும் கதை, வசனகர்த்தாவாக உருவெடுத்தார் 26 வயதே நிரம்பியிருந்த ஆரூர்தாஸ். அதன் பிறகு வந்த 60 ஆண்டுகளில் 1,000 படங்களுக்கு எழுதி, திரையுலகில் அவர் உருவாக்கியது தனிப்பெரும் ராஜபாட்டை பள்ளி ஆசிரியராக இருந்து பாடலாசிரியராக உருவெடுத்தவர் அமரகவி தஞ்சை ராமைய்யா தாஸ். சரியாக 70 ஆண்டுகளுக்கு முன்பு 1952 இல் அவரிடம் 50 ரூபாய் மாதச் சம்பளத்தில் உதவியாளராகச் சேர்ந்தபோது ஆரூர்தாஸுக்கு 21 வயது. அவரிடமிருந்து பிறமொழிப் படங்களைத் தமிழாக்கம் செய்யும் கலையைக் கற்றுக் கொண்டார். என்.டி.ராமராவ் - அஞ்சலி தேவி நடித்திருந்த தெலுங்குப் படம், 'நாட்டிய தாரா' என்கிற தலைப்பில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டது.

அப்போது, அப்படத்தின் பெரும்பாலான காட்சிகளுக்கு ஆரூர்தாஸையே வசனம் எழுத வைத்தார் ராமய்யா தாஸ். உதட்டசைவுக்கு கச்சிதமாகப் பொருந்தும் வண்ணம், மூல மொழி வசனத்தின் அர்த்தம் மாறாமல் கூர்ந்து கவனம் செலுத்தி வசனங்களை எழுதும் அக்கலையில் ஆரூர்தாஸ் நிபுணத்துவம் பெற்றுவிட்டபின், 1957 இல் வெளியான 'கேதி' என்கிற ஹிந்திப் படத்தை தனியொருவராக தமிழாக்கம் செய்தார். அதே ஆண்டில் 'மகுடம் காத்த மங்கை'யாக வெளியான அந்தப் படத்தில்தான் 'வசனம்: ஆரூர்தாஸ்' என முதன் முதலாக அவருக்குத் தனி டைட்டில் கார்டு கொடுக்கப்பட்டது.

தமிழாக்கப் படங்களுக்கு எழுதிக் கொண்டிருந்தவரை நேரடித் தமிழ்ப் படங்களுக்கு எழுதும் விதமாகப் பயிற்று வைத்தவர் ஏ.எல்.நாராயணன். ஆரூர்தாஸை தனக்கு உதவியாளராக விரும்பியழைத்துச் சேர்த்துக் கொண்ட ஏ.எல்.நாராயணன், ஜெமினி கணேசனும் சாவித்திரியும் இணைந்து நடித்து 1957இல் வெளியான நேரடித் தமிழ்ப் படமான 'சௌபாக்கியவதி'யில் பல காட்சிகளுக்கு ஆரூர்தாஸை வசனம் எழுத வைத்தார்.



இளங்கோவனின் வசனத்தில் மனதைப் பறிகொடுத்தவர் ஆரூர்தாஸ். தனது வசனத்தை நடிகர் திலகம் பேசி நடிக்க வேண்டும் என ஆசைப்பட்டார். தனது விருப்பத்தை ஜெமினியிடமும் சாவித்திரியிடமும் தெரிவித்தார். ஜெமினி, சிவாஜியிடமும் சாவித்திரி பீம்சிங்கிடமும் ஆரூர்தாஸைப் பற்றிச் சொன்னார்கள். "பாசமலர்" பட வேலைகள் நடந்துகொண்டிருந்த போது சிவாஜியிடம் ஆரூர்தாஸை அழைத்துச் சென்றார் ஜெமினி. சிகரெட் புகைத்தபடி "யாரிந்தப் பையன்" என ஆரூர்தாஸைப் பார்த்து சிவாஜி கேட்டார்.

"நல்லா வசனம் எழுதுற ஆரூர்தாஸ் இவன் தான்" என ஜெமினி சொன்னார்.

"சின்னப்பையனா இருக்கானே. பீம்சிங், கண்ணதாசன். மெல்லிசை மன்னர்கள் என எல்லாம் பெரியகைகள் தாங்குவானா?" என சந்தேகத்துடன் சிவாஜி கேட்டார்.

உணர்ச்சிவசப்பட்ட ஆரூர்தாஸ் " சந்தர்ப்பம் தந்தால் தூக்கிடுவன்" என்றார். அப்போது அங்கே அமைதி நிலவியது. சந்தர்ப்பத்தை ஆரூர்தாஸ் கெடுத்துவிட்டான் என ஜெமினி நினைத்தார்.

சிவாஜி சில கேள்விகள் கேட்டார். அக்கேள்விகளுக்கான பதிலை, தமிழ் வெண்பா, திருக்குறள் ஆகியவற்றில் இருந்து சொன்னார் ஆரூர்தாஸ். சிகரெட்டை ஆஷ் ரேயில் அணைத்த படி "இவனை ஆபீசுக்கு கூட்டிப்போய் அட்வான்ஸ் வாங்கிக் கொடு" என்றார் சிவாஜி. ஜெமினியால் நம்பமுடியவில்லை.

'பாசமலர்' படத்தில் சிவாஜியின் நடிப்புக்காகவும் சாவித்திரியின் நடிப்புக்காகவும் பாடல்களுக்காகவும் மட்டுமின்றி, ஆருர்தாஸின் வசனங்களுக்காகவும் கரவொலியால் தியேட்டர் அதிர்ந்தது. அதன் பின்னர் சிவாஜியின் மனதில் ஆரூர்தாஸ் தனியிடம் பிடித்தார். தொடர்ந்து தன் படங்களுக்கு ஆரூர்தாஸை வசனங்கள் எழுத வைத்தார் சிவாஜி. தன் மனதுக்குப் பிடித்துவிட்டால், ஒவ்வொருவரையும் ஒரு தனி ஸ்டைலுடன் அழைப்பது சிவாஜியின் இயல்பு. ஆரூர்தாஸ்... சிவாஜிக்கு 'ஆரூரான்' ஆனார். "என்ன ஆரூரான். படத்தில உன் வசனம்தான் பேசப்படணும். அதைப் பேசினதால எனக்குக் கைத்தட்டல் கிடைக்கணும். அப்படி எழுது" என்று உற்சாகமூட்டுவார். 'பாவமன்னிப்பு', 'பார் மகளே பார்' என பல சிவாஜி படங்களுக்கு ஆரூர்தாஸ் வசனம் எழுதினார்.

தேவர் பிலிம்ஸ் படங்களுக்குத் தொடர்ந்து எழுதுகிற வாய்ப்பைப் பெற்றார். எம்.ஜி.ஆருக்கும் ஆரூர்தாஸைப் பிடித்துப் போனது. ஒரே நேரத்தில் எம்.ஜி.ஆர் படங்களுக்கும் சிவாஜி படங்களுக்கும் வசனம் எழுதினார். 1962 ஆம் ஆண்டு ஒரே நாளில் ஆரூர்தாஸ் வசனம் எழுதிய எம்.ஜி.ஆரின் தாயைக் காத்த தனயன் படமும் சிவாஜியின் படித்தால் மட்டும் போதுமா படமும் வெளியாகின. ஒன்று தேவர் படமும் இன்னொன்று ரெங்கநாதன் பிக்சர்ஸ் படமுமாக இருந்த போதிலும் முறையே ஒன்றை எம்.ஜி.ஆர் பிக்சர்ஸும், இன்னொன்றை சிவாஜி ஃபிலிம்ஸும் சென்னை நகரில் வெளியிட்டிருந்தார்கள். இரண்டுமே சூப்பர் வெற்றியடைந்து 100 நாட்களைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தது. மவுண்ட்ரோடு ஏரியாவில் பிளாசாவில் தாயைக் காத்த தனயனும் மிட்லண்டில் படித்தால் மட்டும் போதுமாகவும் ரசிகர்கள் கூட்டத்தில் தத்தளித்தன.

எம்.ஜி.ஆரின் அடுத்த படத்துக்காக வசனம் எழுதச் சென்றிருந்த போது, 'போன படம் வெற்றியடைந்ததுக்கு உனக்கு எந்த பரிசும் நான் கொடுக்கலை. இப்போ தாயைக் காத்த தனயன் பெரிய வெற்றியடைந்திருக்கு உனக்கு என்ன பரிசு வேணும்?' என்று கேட்க, 'அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்ணே, உங்க அன்பு இருந்தால்போதும்' என்றார் ஆரூர்தாஸ்.

அன்று பிற்பகல் சிவாஜி பட ஷூட்டிங் போனபோது ஆரூர்தாஸை தனியே அழைத்த சிவாஜி, 'ஆரூரான், இதற்கு முந்தி நீ எழுதின பாசமலர் பெரிய வெற்றியாச்சு. அதுக்கு நான் பரிசு எதுவும் தரலை. இப்போ நீ எழுதின படித்தால் மட்டும் போது மாவும் நல்லா ஓடிக்கிட்டிருக்கு. உனக்கு என்ன பரிசு வேணும் சொல்லு. அண்ணன் கிட்டே இருந்தா தர்ரேன். இல்லேன்னா வாங்கித் தர்ரேன்" என்று கேட்டதும் ஆரூர்தஸ் திகைத்தார். அதெப்படி அவர்கள் இருவரது மனதிலும் ஒரே மாதிரி எண்ணம் ஓடுதுன்னு என்ற ஆச்சரியத்துடன். எம்.ஜி.ஆருக்கு சொன்ன அதே பதிலையே சிவாஜிக்கும் சொன்னார் ஆரூர்தாஸ். 'அன்புதான் நிறைய இருக்கே, வேறென்ன வேணும்?' என்றார் ஆரூர்தாஸ்.

இரண்டு நாள் கழித்து எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் அலுவலகத்தில் இருந்து போன் பண்ணி வரச் சொன்னார்கள். ஆரூர்தாஸ் போனபோதுன். ஒரு பெரிய வெள்ளித் தட்டில் நான்கு மூலைகளிலும் சிறிய தங்கத் தகடுகள் பொருத்தியிருக்க, தட்டின் நடுவில் 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் தாயைக் காத்த தனயன் வெற்றிக்கு ஆரூர்தாஸ் அவர்களுக்கு அன்பளிப்பு' என்று பொறிக்கப்பட்டிருந்த அந்தத் தட்டை எம்.ஜி.ஆர் வழங்கினார்.

மறுநாள் பிற்பகல் சிவாஜி பிலிம்ஸிலிருந்து அழைப்பு வந்தது. போனால் அங்கே சிவாஜி அவர்கள், மூன்றரை சவரன் எடையுள்ள, உள்ளங் கையை விட அகலமான தங்கப்பதக்கம் ஒன்றை ஆரூர்தாஸுக்கு அணிவித்தார். அதில் 'சிவாஜி பிலிம்ஸ் படித்தால் மட்டும் போதுமா 100 ஆவது நாள் வெற்றிவிழா' என்று சிவாஜி பிலிம்ஸ் எம்ப்ளத்துடன் பொறிக்கப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகிய இருவரும் ஒரேமதிரி நினைத்தது ஆரூர்தாஸால் நம்பமுடியவில்லை. ■

# பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

## ஆழ்மனப் பதிவுகளின் வெளிப்பாடுகளும் யோக வாழ்வும்

முரளீதரன் நவரத்தினம்

‘சாதகமான சூழ்நிலைகள் நிலவும் போது, ஆழ்மனப் பதிவுகள் வெளிப்பட்டு கனிந்து வருகிறது.’ - சூத்திரம் 4.8

எமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளும் காரணங்களும் செயல்களும் நாம் அறிந்தோ அறியாமலோ ஆழ்மனப் பதிவுகளை ஏற்படுத்துகின்றன. நல்வினை, தீவினை எனும் இந்த கர்ம பதிவுகள் சரியான காலம் கனியும் போது வெளிப்படுகின்றன. ஒருவர் இப்பிறவியில் தீவினைகள் செய்தாலும் அவர் முன்னர் செய்த நல்வினைகளிற்கான சூழ்நிலைகள் கனிந்து வருமானால், அவை தம்மை வெளிப்படுத்தி நிற்கும். சிலவேளைகளில் தூயவர்கள் என்று நாம் நினைப்பவர்கள்கூட துன்பங்களில் உழல்வதைக் கண்டிருக்கிறோம்.

‘பிறப்பு, இடம் மற்றும் காலத்தால் பிரிக்கப்பட்டிருந்தாலும் நினைவுகளும் ஆழ்மனப் பதிவுகளும் ஒன்றாகவே தொடர்கின்றன.’ - சூத்திரம் 4.9

இறப்புக்கு பின்னரும் சீவனானது பல்வேறு பிறப்புகளை எடுக்கும் போது நினைவுகளும் ஆழ்மனப் பதிவுகளும் பிறவிகள் தோறும் தொடர்கிறது. பல்வேறு பிறவிகளாக இருப்பினும் சீவன் ஒன்றே. சில யோகிகள், ஞானிகளுக்கு முற்பிறப்பில் யாராக இருந்தோம் என்ற அறிவு கிடைக்கிறது.

‘ஆசைகள் என்றும் இருப்பதினால், இந்த ஆழ்மனப் பதிவுகளும் ஆதியில் இருந்து இருக்கின்றன.’ - சூத்திரம் 4.10

சகல உயிர்களினதும் வாழ்வின் மீதான பிடிப்பும் அதன் காரணமான தேடல்களினால் உண்டாகும் பற்றுகளும் ஆசைகளும் தொடர்கதையாகி, வினைப்பதிவுகளாகி பிறப்புகள் தொடர்வதற்கும் காரணமாக அமைந்து விடுகிறது.

இயற்கையின் விதியான காரணமும் விளைவும் என்றும் தவறுவதில்லை. சாதாரண மனிதர்கள் தம் அறியாமையினால் அன்றாடம் நிகழும் இந்த நிகழ்வுகளை ஆழமாக உணர்ந்து கொள்ளும் மனநிலையில் இருப்பதில்லை.

யோக வாழ்வு

‘அறியாமை, நான்-உணர்வு (தன்முனைப்பு), பற்று, வெறுப்பு மற்றும் வாழ்வின் மீதான மோகம் என்பன துன்பம் தரும் தடைகள்’ என்று சூத்திரம் 2.3 இல் பதஞ்சலி முனிவர் கூறுகிறார். அறியாமையினால் எமது எண்ணங்கள் மற்றும் உணர்வுகளோடு நம்மை பிழையாக அடையாளப்படுத்துவதன் மூலம் நான் என்ற ஆணவம் பிறக்கிறது. இதன் விளைவாக பற்றுகளும் விருப்பு-வெறுப்புகளும் ஏற்படுகின்றன. இவை வாழ்வின் மீதான மோகத்தையும் இறப்பு பற்றிய பயத்தையும் ஏற்படுத்துகின்றன.

தன்னை உணர்வதற்கான இந்த 5 தடைகளை வெல்லும் போது, எமது வினைப்பதிவுகள் மீதான வெற்றி அல்லது கட்டுப்பாடு எமது கையில் உள்ளதை உணர்கிறோம். இங்கே தான் தன்னை உணர்தலுக்கான யோக கல்வியும் அதன் காரணமான சுய விசாரணையும் சித்த சுத்திக்கும் சித்திக்கும் வழிவகுக்கிறது.



மூன்று வகையான வினைப்பதிவுகள்(கர்மா) இருக்கின்றன. இப்பிறவியில் அனுபவித்து வரும் “பிரார்த்த கர்மா’, இப்பிறப்பில் நாம் சேர்த்துக் கொண்ட ‘ஆகாமிய கர்மா’ மற்றும் வரப்போகும் பிறப்புகளில் செயற்படப் போகும் ‘சஞ்சித கர்மா’. யோக வழி நிற்பதன் மூலம் தன்னை அறியும் கலையை உணர்ந்த யோகியர் தியானம் மற்றும் சமாதி அனுபவங்களின் மூலம் தாம் மேலும் புதிய வினைப் பதிவுகளை சேர்த்துக் கொள்வதை நிறுத்திக் கொள்கின்றனர். இத்தகைய நிலையை அடைவதற்கு முதலில் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மனதில் ஒரு அமைதி ஏற்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, யோக சாதனை மூலமோ அல்லது சுயமாகவோ மௌன நிலையை பயிற்சி செய்து நிலை பெறுவதன் மூலம் இறைநிலையோடு ஒன்றுதல் சாத்தியமாகிறது.



மனவாக்குக் காயத்தால் வல்
வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்
வினை மன்னா
மனவாக்கு கெட்டவர் வாதனை தன்
னால்
தனைமாற்றி யாற்றத் தகு
ஞானி தானே.
- திருமந்திரம் 2612

சீவர்களின் மனத்தாலும் சொல்லாலும் உடலின் செயலாலும் வினைகள் சேருகின்றன. கோபம், ஆசை, மயக்கம் போன்ற பல மனித வெளிப்பாடுகள் வினைப் பதிவுகளாகின்றன. இவை நேர்வழியில் நின்றால் வினை சேராது. நமக்கு வரும் செய்திகள், அன்றாட செயல்களை செய்யும் முன் அவற்றின் உண்மைத் தன்மை அறிந்து மனம், சொல், செயல் யாவும் ஒன்றிணைந்து பயணிக்கும் தவயோகிகள், ‘எல்லாம் அவன் செயல்’ என்று தன்முனைப் பற்று செயலாற்றுவதன் மூலம் வினைப்பயன் தம்மைப் பற்றாது தப்பித்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கு கர்ம முடிச்சை வெற்றிகரமாக அவிழ்க்கும் கலை தெரிந்திருக்கிறது.

ஒரு செய்தி அல்லது சம்பவம் பற்றிய மனதின் பிழையான எண்ணங்களும் தீர்ப்புகளும் தேவையற்ற வினைப்பதிவுகளை எம் சித்தத்தில் ஏற்படுத்திவிட நாம் அனுமதிக்கக் கூடாது. ஒரு எதிர்மறையான கோப உணர்வு தோன்றும் போது அதற்கு எதிரான அன்பு போன்ற உணர்வு மனதில் எழும்படி அன்றாட வாழ்வில் நாம் பழகிக் கொள்ள வேண்டும். சகலரிலும் இறைத்தன்மையைக் காணும் மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய உண்மையை தேடும் பயிற்சிகள், பேருண்மையான இறைநிலையை உணர துணை நிற்கும்.

தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்து பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவன் அருளாலே - திருமந்திரம் 261

தன்னை உணர்ந்த யோகிகள், ஞானிகள் முன் செய்த வினைகளை அறுப்பதோடு, இப்பிறவியில் சேராமல் பார்த்துக் கொள்வார்கள். இதற்கு காரணம் அவர்கள் தவ வலிமையினால் சென்னி என்று சொல்லப்படும் தலையில் அல்லது துரியத்தில் அல்லது சிற்றம்பலத்தில் மனம் ஒடுங்கி, தான் அவன் என்ற உணர்வினால் உண்மை புலப்பட வினைத் துன்பம் சேராது தடுப்பார்கள் என்கிறார் திருமூலர். யோக பயிற்சியினால் சிற்றம்பலம் என்று சொல்லப்படும் தலைப் பகுதியில் உணர்வுநிலை இருக்கும் போது உண்மையை உணர்தலும் மன ஒருமைப்பாடும் மௌனநிலையும் கைகூடுகிறது.

ஆசை ஏற்படுவதற்கு காரணம், அதன் பலன், ஆதாரம் மற்றும் பற்றியிருக்கும் பொருட்கள் போன்ற காரணிகள் காரணமாய் இருப்பது போல, இந்த 4 காரணிகளும் இல்லாமல் போகும் போது ஆசையும் இல்லாமல் போகிறது. இங்கு காரணமாக இருப்பது எமது எண்ணங்கள், உணர்வுகளுடன் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளுதல். எம் சுயத்தை, சாட்சி நிலையில் உணரக்கூடிய ஆன்ம நிலையை மறந்திருத்தல். இதன் காரணமாக ஏற்படும் பலனாக கர்ம வினைகளை ஏற்படுத்தும் செயல்கள் அமைகின்றன. இதனைத் தூண்ட ஆதாரமாக இருப்பது நமது நினைவுகள். பற்றியிருக்கும் பொருட்கள் காரணமாக இந்த ஆசை பிறக்கிறது. இந்த ஆசைகளை நிறைத்துக் கொள்ளும் சித்தம் தியானத்தினால் வெறுமையாகும் போது ஆசைகளும் மறைந்து விடுகின்றன.

ஆற்றல் மிக்க ஒரு யோகியின் வாழ்வு பழைய கர்ம பதிவுகளால் பாதிக்கப்படுவதில்லை. அவனுடைய ஆன்ம வழிகாட்டலில் மட்டுமே நடக்கிறது. இது உடல்-மன அடையாளங்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளுவதால் சாத்தியமாகிறது.

சாதாரண மனிதர்களின் வாழ்வு வினைப்பயனின் படி நடக்கிறது. ஆனால், அதனை மாற்றும் ஆற்றல் தன்னிடம் உள்ளதை அவன் உணரவில்லை. யோக வாழ்வின் மூலம் வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் விழிப்புணர்வுடனும் உண்மையின் வழியிலும் வாழும் யோக வாழ்வு, வினைப்பதிவுகளைத் தடுப்பதோடு சமுதாயத்தை மாற்றும் சக்தி தனிமனித விழிப்புணர்வின் மூலம் சாத்தியமாகிறது. உண்மையின் வழியில் வாழ்வு தொடர்கிறது. ■

தொடர்கதை

# இரு மலர்கள்

## மலர் 14

யாழ் சத்யா



அதுவரைக்கும் ஏதோ யோசனையாக புட்டிலே படம் கீறிக் கொண்டிருந்த அருண்யா,

“அப்பா... சனிக்கிழமை அஞ்சு மணிக்குப் பிறகு போங்கோ... அப்பதான் நான் ரியூசனுக்கும் போய்ட்டு வரலாம்”

“ஏன்... நீ போய் என்ன செய்யப் போறாய்?” கொஞ்சம் காட்டமாக கேட்ட தாய்க்கு,

“அக்காவுக்கு சாமான் எல்லாம் அடுக்கி குடுக்க வேணாமே...” சொன்னதுதான் தாமதம் தெய்வநாயகி மறுபடியும் ஆரம்பித்து விட்டார்.

“முதல்ல உன்ர அறையை போய் அடுக்கு... எடுத்த சாமான் எடுத்த இடத்தில வைக்கிறேல்ல. பள்ளிக்கூடத்தால வந்து கழட்டி எறிஞ்ச வெள்ளைச் சட்டை கட்டில்ல கிடக்கு... பிறகு அதை தூக்கி நிலத்தில போட்டிட்டுப் படுக்க வேண்டியது... சப்பாத்து ஒரு இடம், சொக்ஸ் ஒரு இடம... மொட்டைத் தலை இழுத்த சீப்பு இங்க சாப்பாட்டு மேசையில இருக்கு... பள்ளிக்கூட ஃபாக் ஹோல் ஸோபாவில... ரியூசன் கொப்பி இன்னும் சைக்கிள் கூடைக்க... இவ போய் அவளுக்கு றூம் அடுக்கிக் குடுக்கப் போறாவாம்...”

“இப்ப எதுக்கு மனுசரை சாப்பிட விடாமல் கத்துறியள்? அக்காட றூமைப் பாத்திட்டு அப்பிடியே ரியோவில ஐஸ்கிரீம் குடிக்கத்தான் போறன்... அதில உங்களுக்கு என்ன பிரச்சினை?” என்று தான் செல்லும் உண்மை காரணத்தைப் போட்டுடைத்தாள் அருணி.

“அப்பிடிச் சொல்லுடி என் ராசாத்தி... நீயாவது றூம் அடுக்கிக் குடுக்கப் போறதாவது... நீயெல்லாம் வாறவனிட்ட நல்லா நாலு வாங்கித்தான் திருந்துவாய்...” சராசரி தாயாக சாபம் போட்ட தெய்வநாயகியும் வாயடித்துக் கொண்டிருந்த அருண்யாவும் தங்களை அங்கே விதி பார்த்து சிரித்துக் கொண்டிருந்ததை அறியவில்லை.

அங்கே ஸாம் வீட்டில்...

அடுத்த நாள் மதியத்துக்கு பின்பே விரிவுரைகள் இருந்தமையால் விடுதியில் தங்காமல் வீட்டுக்கு வந்திருந்தான். டிவிடியில் ஜெயம் படம் ஓடிக் கொண்டிருக்கையில் ரிமோட்டை சுழற்றிக் கொண்டு சிந்தனை வயப்பட்டவனாக விட்டத்தில் பார்வையைப் பதித்திருந்தான்.

அவனின் மோன நிலையைப் பார்த்தவாறே அருகில் சென்று அமர்ந்தார் அந்தோனி.

“என்ன தம்பி! யோசனை பலமாக் கிடக்கு? எந்தக் கோட்டையை பிடிக்கத் திட்டம்? அல்லது ஏதும் கப்பல் கவிழ்ந்து போச்சோ?” சிரித்தவாறு கேட்டார் தந்தை. அவர் மடி மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டவன்,

“அப்பா... உங்களிட்ட ஒரு விடயம் சொல்ல வேணும்...” என்று இழுத்தான்.

“என்னப்பன் வேணும்? மோட்ட சைக்கிள் எடுக்கப் போறன் என்றாய்... எப்ப காசு எடுத்து தர...? அல்லது சோதினை ஏதும் ஃபெயில் விட்டிட்டியோடா மோனை?”

கரிசனமாய் கேட்டவரிடம்,

“என்னைக் கொஞ்சம் சொல்ல விடுங்கோவன்”

“சரி... சரி... நீயே சொல்லு கண்ணா...”

“அப்பா... நான் ஒரு பிள்ளையை விரும்புறன் அப்பா...”

“என்னடா தம்பி சொல்லுறாய்?” கொஞ்சம் அதிர்ச்சியாகவே கேட்டார். ஆனால், அந்த தந்தையின் அதிர்ச்சி மகன் காதலிக்கிறான் என்பதற்காக இல்லை. காதலிக்கும் அளவு மகன் பெரியவனாகி விட்டதை தான் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்பதனால் விளைந்தது.

பத்து வயதில் தாயை இழந்து நின்ற கடைக்குட்டி மகனிடம் அவருக்கு பாசம் கொஞ்சம் அதிகமே. அவனும் எல்லாவற்றிற்கும் அப்பா.. அப்பா.. என்று அவர் காலையே சுற்றுவான். அன்னையின் பாசத்தையும் முடிந்தளவு அவரிடமே பெற முனைந்தான்.

“இப்ப எதுக்குப்பா ஷொக் ஆகிறிங்க?”

“இல்லையடா... நீ அவ்வளவு வளந்திட்டியா என்று பாக்கிறன்...”

“அப்பா... நான் கம்பஸ் செகண்ட் இயர் படிக்கிறன். நான் ஒண்ணும் சின்ன பிள்ளை இல்லை” செல்லமாய் முறுக்கியவனிடம்,

“இப்ப நீ லவ் பண்ணிறதில என்ன பிரச்சினை? எதுக்கு இப்ப மோட்டைப் பார்த்து யோசித்துக் கொண்டிருக்கிறாய்? அண்ணாவங்கள் பேசுவாங்கள் என்று பயப்பிடுறியே... அவங்களை விடு... நான் பார்த்துக் கொள்ளுறன்..”

தோளுக்கு மிஞ்சியவன் தோழன் என்று ஒரு தந்தையாக இல்லாமல் நண்பனாக அவன் காதலுக்கு பச்சைக் கொடி காட்டினார் அந்தோனி.

“அதுசரி... ஆர் பிள்ளையடா? கம்பஸில கண்டனியோ? போட்டோ இருந்தால் காட்டன். அப்பாவும் மருமகளைப் பாக்கிறன்”

“எல்லாம் உங்களுக்கு தெரிஞ்ச ஊர் பிள்ளை தான்”

“நீ காதலிக்கிற அளவு எங்கட ஆட்களுக்க ஒருத்தரும் இல்லையே...” என்று வாய் விட்டே யோசிக்க, எழுந்து சென்று கவியின் புகைப்படத்தைக் கொண்டு வந்து தந்தையின் கையில் கொடுத்தான்.

புகைப்படத்தை கூர்ந்து பார்த்தவர்,

“அடே இது சந்திரஹாசனிட மூத்த பெட்டை எல்லே... டொக்டருக்கு படிக்க கிடைச்சிருக்கு என்று பேப்பரில எல்லாம் போட்டோ வந்திச்சே... என்னடா இப்பிடி குண்டைத் தூக்கிப் போடுறாய்?” கொஞ்சம் கவலையாகவே கேட்டார்.

“ம்ம்... அதுதான்பா பிரச்சினை...”

“அந்தப் பிள்ளைக்கு உன்னை பிடிச்சிருக்கோ?”

“ஓமப்பா... வாயால சொல்லேல்ல... ஆனால், எனக்காகத்தான் கொழும்பு கம்பஸ் போகாமல் யாழ்ப்பாணக் கம்பஸ் வந்திருக்கிறாள். அவள் கண்ணாலயே தன்ர காதலை இண்டைக்கு சொல்லிட்டாள் அப்பா.”

“அதெல்லாம் சரி தம்பி. அவையும் நாங்களும் வேற வேற ஆட்கள்... சமயமும் வேற... அவையிட வீட்டில ஒத்துக் கொள்ளுவினம் என்று நான் நினைக்கேலடா” கவலையாகக் கூறினார் அந்த பாசக்கார தந்தை.

“ஓமப்பா... நான் கவிட தங்கச்சிட்ட கடிதம் குடுத்து விட்டனான். அதை அவையிட அம்மா பாத்திட்டாவாம். தான் உயிரோட இருக்கிற வரை காதல் கத்தரிக்காய் என்ற கதைக்கே வீட்டில இடம் இல்லை என்று பேசினவவாம்”

“ம்... அது தெரிஞ்ச விடயம் தானேடா... இன்னொரு பொம்பிளைப் பிள்ளையும் வைச்சிருக்கினம்... இப்பிடி சாதி, சமயம் மாறி மூத்தவளுக்கு கட்டி வைச்சால் பிறகு இளையவளை ஆர் கட்டுவாங்கள்?”

“இப்ப என்னதாம்பா என்னை செய்யச் சொல்லுறிங்க? கவியை மறந்திடு என்று மட்டும் சொல்லிப் போடாதிங்கோ... அவளைத் தவிர வேற ஒருத்தரையும் நான் கட்ட மாட்டன்”

“அப்பா அப்பிடி சொல்லுவனா அப்பன்? எடுத்தன் கவித்தன் என்று கல்யாணப் பேச்சு பேசேல்லாது தம்பி. எப்பிடியும் அவையிட வீட்டில எதிர்ப்பு வரும்.. கொஞ்சம் பொறுமையாகத்தான் யோசிச்சு செய்யணும் அப்பு... அப்பாட்ட சொல்லிட்டாய் எல்லோ... இனி இது அப்பாட பொறுப்பு... நீ இந்தக் கவலையெல்லாம் விட்டிட்டு படிக்கிற அலுவலை மட்டும் பார். ரெண்டு பேரும் கம்பஸ முடியுங்கோ. அதுக்கு பிறகு பாப்பம். படிச்சு முடிக்க முதல் அவளுக்கு கட்டி வைக்கவா போகினம்? இல்லைத்தானே... அதால அந்தப் பிள்ளையையும் காதல் அது இதென்று குழப்பாமல் ஒழுங்காக படிக்க விடு... என்னப்பன் அப்பா சொல்லுற விளங்குதா?”

என்னதான் மகன் மேல் கண் மூடித்தனமான பாசம் இருந்தாலும் யதார்த்தத்தை உணர்ந்து அதேநேரம் மகனுடைய காதலுக்கு எதிர்ப்பும் தெரிவிக்காமல் பொறுமையாக இருக்கும்படி அறிவுரை கூறினார் அந்த பாசக்கார தந்தை அங்கேதான் தான் தப்புப் பண்ணுவது தெரியாமல்.

“நீங்க சொன்னால் சரிப்பா... நான் அவளைக் குழப்ப மாட்டன். படிப்பு முடியிற வரைக்கும் காத்திருப்பன். சரியா? ஓகேப்பா... நான் படுக்கப் போறன்..” என்று தந்தையிடம் விடைபெற்று தனது கட்டிலில் வந்து விழுந்தான்.

கவியின் புகைப்படத்தை பார்த்து, “ரெண்டு வருடமாகக் காத்திருந்த நான் இன்னும் நாலு வருடம் காத்திருக்க மாட்டனா? என்ர கவிக்குட்டிக்காக சாகிற வரைக்கும் காத்திருப்பன்... ஐ லவ் யூ குட்டி” என்று அவள் புகைப்படத்திற்கு ஒரு முத்தத்தை வழங்கியவன் அதை அணைத்தவாறே தூங்கிப் போனான்.

அவன் வார்த்தைகளே உண்மையாகப் போவதை பாவம் அன்று அந்த உண்மைக் காதலன் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் நாளை அவனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியை வழங்க காலம் காத்துக் கொண்டிருந்தது. ஸாமிற்கு நாளை கிடைக்கப் போகும் இன்ப அதிர்ச்சி என்ன?

(மலரும்...)

# முன்னாள் காதலி

சிறுகதை

எஸ்.எஜ்.எம்.ரபிதீன்

சில வருடங்களுக்கு முன்பு. 'ஹ்ஹூம் இந்த மூஞ்சிக்கெல்லாம் ஒரு அட்ட பிகர்கூட இனியும் செட்டாகவே செட்டாகாது'னு என்று அவநம்பிக்கை நாக்குத்தள்ளிப் போய் இருந்த சமயத்தில்தான் அந்த அம்சமான பிகரை சந்திக்கும் வாய்ப்பொன்றும் எனக்கு அமைந்தது.

அன்று கொழும்பிலிருந்து ஊருக்கு ரயில் வண்டியினிலே பயணித்துக்கொண்டிருந்தேன். ஊரை அண்மித்த பக்கத்து ஊர் ஸ்டேஷன் ஒன்றில் பத்து நிமிடம்வரை ரயில் நிறுத்தம் பெற்று, அங்கிருந்த பயணிகளையும் அதில் ஏற்றிக்கொண்டு மறுபடியும் ஊரை நோக்கி புறப்படவும் அது தயாரானது. நான் இருந்த ரயில் பெட்டியிலேயே ஒரு பேமிலியும் ஏறிக்கொண்டனர். அவர்களோடுதான்

அந்த அம்சமான கேர்ளும் வந்திருந்தாள். 'அநேகமாக அவளது பேமிலியாகத்தான் இருக்கவேண்டும் அந்த லந்துவிட்டபடி ஏறிய கூட்டம் என அப்போது புரிந்துகொண்டேன்.

அங்குமிங்குமாக அழைந்த என் கண்களின் ஷூம் விஷூவலோ அடிக்கடி ஒரு முறை, அவள் அழகையும், அவள் பேசி சிரித்துக்கொள்வதையும் அடிக்கடி ரசிக்காமலும் இருந்ததில்லை. அவளும் அப்படியே அவர்களோடு பேசிக்கொண்டே என்னையும் நோக்கி வெகுளித்தனமாய் சிறிதாய் புன்னகை பூத்துக்கொண்டாள்.

ரயில் தண்டவாளத்திலிருந்தே விலகி மொத்தமாய் கடலில் படகு போன்று மிதப்பதாய் ஒரு பீலிங்க் என் ஹார்ட்டில் கும்மாளமிட்டுக் கொண்டது. காலத்துக்கும் காதல் எனும் நம்பிக்கைக்கு டூலெட் போட்டுவைத்திருந்த என் இதயத்துக்குள் பட்டாம்பூச்சிகள் டெலிபோன் அடிக்க, ஊடறுத்துச்சென்ற மரங்களின் நிழல்களோ மென்மையான என் தேகமெங்கும் காற்றோடு மோதிச்சென்றது. (இந்த மொக்க டயலொக்குக்கும் அரசியல் கட்சிகளின் சின்னத்துக்கும் சத்தியமாக சம்மந்தமே கிடையாது.)

இத்தனையும் நடந்துகொண்டிருக்க நடுவில் ப்ரேக் போட்டது ரயில்... ரயில் வீல்கள் மாத்திரமல்ல எனது பீலிங்க் பினாத்தல்களும் கொய்யோமுய்யோனு கதறியபடி!.

'பார்ப்பதற்கு 90களில் பாலிவுட் சினிமாவை கலக்கிய நடிகைகளாட்டம் இவளும் அதே அச்சுஅசலாக அம்சமாருக்காளே படுபாவி.' 'இவளாவது, என்னைப் பார்த்தே சிரிக்கிறதாவது..!? 'சரி எதுக்காக என்னைப்பார்தே சிரிக்கிறாள்!' எனும் டவுட் ஐன்ஸ்டீன் மண்டையை குடைவது போன்று எனக்குள்ளும் குடையவே சற்று உசாராகியபடி 'நிஜமாகவே பின்னாடி ரோமியோ சாமியோ எவனாவது நின்றுகொண்டு நூல் விட்டுக்கொண்டிருக்கானோ!?' என நெஞ்சம் பக்கு பக்குனு அடிக்க பேக்க பேக்க முழித்தபடி சுதாரித்துக்கொண்டே பின்னாடியும் திரும்பிப் பார்த்துக்கொண்டேன். 'அட கருமமே நான் இருந்ததே அந்த ரயில் பெட்டியின் கடைசி சீட்டில்தான் குமாரு என்கிறதே அப்போதுதான் புரிந்துகொண்டு நிம்மதியாக பெருமூச்சு ஒன்றை விட்டபடி மறுபடியும் முன்னோக்கி பழைய நிலைக்கு திரும்பிக்கொண்டேன்.

மறுபடியும் மனசாட்சி குடைந்துகொண்டேயிருக்க 'அடச்சிறுக்கிமகள் இவள் கிறுக்காயிருப்பாளோ..!?, இல்லன்னா இவளது பார்வையில் ஏதாவது கோலார் கீலார் ஏதாவது இருக்குமோ!? என ஒரே குழப்பத்தில் ஸ்டேஷன் வரும்வரை தலைமுடியை கத்திரிக்கோல் இன்றி பிய்த்து பித்தானாகியே போயிருந்தேன்.

சடாரென ப்ரேக் போட்டு நிறுத்திக்கொண்ட ரயில் ஊர் ஸ்டேஷன் பிலாட்பாராத்தில் வந்து நின்றுகொண்டது.

கடைசி நொடியில் நான் நினைத்த அனைத்தும் தவறென உணர வைத்தாள் மறுபடியும் அவள் சிரித்துக்கொண்டு இறங்கியபோது!. நான் இறங்காமலே ரயிலின் ஜன்னல் வழியாக கண் இமைக்காமல் அவளையே வெறித்தனமாக! பார்த்துக்கொண்டிருந்தேன்.

அங்கு சவாரிக்காக நின்றிருந்த ஓர் ஆட்டோவில் ஏறிக்கொண்ட அவள், மீண்டும் ஒருமுறை என்னைப் பார்த்து சிரித்தபடி அவ்விடத்தை விட்டும் நகர்ந்தாள் அந்தத் தேவதை.

ரயில் தொடர்ந்து மட்டக்களப்பை நோக்கி பயணிக்கத் தயாரானதையும் அறியாமல் அப்படியே பப்பரப்பானு சற்று கோமாவில் உறைந்துபோயிருந்தேன்.

ஊர் வந்ததும் புரியாமல் தேய்ந்துபோன அந்தச் சீட்டை மறுபடியும் எதுவெதுக்கோ தேய்த்துக் கொண்டிருந்தேன். ரயில் இஞ்சினின் உருமலும் அதன் ஆட்டமும் சொப்பனத்தில் பறந்துகொண்டிருந்த அந்த வினாடிகளை சோக்காவே டிஸ்டப் பண்ணியதுபோக, "அடேய் எருமமாடு உன்னத்தான் கேட்குதா...? ஏதாவது தேறுமா?" என டீடியாரின் அதட்டலோடும் ஏச்சுப்பேச்சோடும் அந்த சீனுக்கு எண்டு கார்ட்டும் போடப்பட்டது.

பதறியடித்து பையைத் தேடி எடுத்து ஓடும் ரயிலில் இருந்தே குதித்து ஒருவழியாக இலாபகரமாகவே இறங்கிக்கொண்டேன்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவளை ஊர்முழுக்க அங்குமிங்குமாக தேடி, பிச்சைக்காரனாட்டம் அழைக்களிந்த நானோ ஒருவழியாக அதிஷ்டவசமாகவே அவள் குடியிருக்கும் குடியிருப்பு பகுதியையும் அடையாளம் கண்டுகொண்டேன். எனது ஊரைச் சேர்ந்தவள்தான். அடடா பக்கத்து ஸ்கூலில்தான் படிக்கிறாள்! என்பதையும் நீண்டநாளாக வேவு பார்த்தே தெரிஞ்சிக்கிட்டேன். "இதெல்லாம் ஒரு புழப்புன்"னு நீங்க காறித் துப்புறது புரியுது. இனிமே இதுதான் புழப்புனும் ஆகிப்போச்சு...



அவள் டியூசன் போகும்போதெல்லாம் பல தடவை அவளைப்பார்த்து பரவசம் அடைந்தேன். "மறுபக்கம் அவளும்தான் என்றாள் நம்புவீங்களா? கறுமம் நம்பித்தான் ஆகவேண்டும் என்பதே உங்கள் தலைவிதி!?.

நன்றாகவே போனது. சைக்கிள் டயர்கள் தேய்ந்து அதன் இரும்புச் சக்கரம் தெரியும் அளவுக்கு பிடிவாதமாக மாறிக்கொண்டிருந்தது என் காதல் எனும் மாயை.

அதுவரை நாங்கள் இருவரும் எந்தவொரு வார்த்தையும் பேசியதாக இல்லை. கண்களால், புருவங்களால் புதிர்கொண்ட மொழியாடலுடன் ஊடல்களும் நீடித்தன.

நாட்களும் நகர நகர உலகத்தில் துரதிஷ்டம் என்று எதுவெல்லாம் இருக்குதோ அதுவெல்லாம் மூட்டை கட்டி என் முதுகில் ஏறிக்கொள்ள எனக்குள் அனைத்தும் நரகமாக மாறிக்கொண்டிருந்தது.

சரி எப்படியாவது பேசி என் நிலமையைப் புரிய வைத்துவிட்டு தொடரலாம் என்றே கோல் பண்ணுவதற்காக அவள் மொபைல் நம்பரைக் கேட்டு சைகையால் அம்பு விட்டேன். எதுக்கெடுத்தாலும் பைத்தியக்காரியாட்டம் சிரித்துக் கொள்வாள். அன்றும் அதுபோன்றே சிரித்துக் கொண்டே போனவள் திடீரென திரும்பிப்பார்த்து அப்புறமாகத்தான் அந்த எழவை புரிந்துகொண்டாள். தலையை ஒருமுறை அசைத்து "ஹ்ம்" என்றே நகர்ந்து சென்றாள்.

மறுநாள். வழமையாக அவள் டியூசனுக்கு செல்லும் அதே வீதியில் அவள் செல்கையில் ஓர் துண்டுப் பேப்பரையும் கசக்கிச் சுருட்டி கீழே விட்டுச்சென்றாள். சைக்கிளில் சென்ற நானும் 'மொபைல் நம்பராகத்தான் அது இருக்கும்' என புரிந்துகொண்டேன்.

அதை எடுப்பதற்கு பலமுறை முயற்சித்தும் அவ்வீதியில் ஜனநெரிசலோ குறைந்தபாடில்லை என்றாகிப்போனது.

பலமணிநேரம் நாய் படாத பாடாக சுற்றிச் சென்று இறுதியில் திரும்பி வருகையில் அந்தப் பேப்பர் துண்டும் எங்கோ காற்றில் பறந்து சென்றுவிட்டது அவள் போன்றே!.

தொடர்ந்தும் முயற்சிக்கையில் தோல்வி நிலை சிறப்புடன் செயல்படுத்திக்கொண்டிருக்க எனது வெளிநாட்டுப் பயணத்துக்கான டிக்கெட்டின் திகதி மறுமுனையில் என்னைப்பார்த்து பல்லை இழித்தபடி நக்கலாய் சிரித்துக்கொண்டது.

இதற்கிடையில் எந்தவொரு தொடர்புமே இல்லாமல் அற்றுப்போக 'கடைசிவரை இதுதான் நிலையோ!' என்று பல கனவுகளுடனும் கவலையுடனும் வெளிநாடு நோக்கிப் பறந்து சென்றேன்.

எனக்காக அவள் காத்திருப்பாள் எனும் நம்பிக்கை என்னை திடப்படுத்தவே பொறுமையோடு சில வருடங்களைக் கடத்தியபின் நாடு திரும்பினேன். அவள் உலாவிய அந்த ரியூசன் சென்டர், வீதிகளென பல்வேறு இடங்களிலெல்லாம் பித்துப்பிடித்துப் போய் தேடினேன், அவளை இறுதிவரை காணவேயில்லை..!

வருடங்களுடன் அவளையும் சேர்த்து தொலைத்துவிட்டது மாத்திரம்தான் என் எதிர்பார்ப்பெங்கும் மிஞ்சிப் போயிருந்தது. 'எப்படியும் அவள் திருமணம் முடித்திருப்பாள்... அவளுக்கு குழந்தைகளும் இருக்கலாம்' என அவள் வயதை வைத்தே யூகிக்கையில் என் நம்பிக்கை அனைத்தும் படிப்படியாகவே அவநம்பிக்கையை நோக்கி சறுக்கிக் கொண்டிருந்தது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த இந்தச் சம்பவத்தில் அவளை ஒரு தடவையேனும் நான் காணும் சந்தர்ப்பம் எதுவுமே எனக்கு கைகூடவில்லை.

கடந்த மாதம் இறுதியில் ஒருநாள். ஒரு பெட்டிக்கடைக்கு நான் சென்றிருந்தேன். பின்னாடி ஒரு பெண் நின்றிருந்தாள். சற்று ஒதுங்கி அவளுக்கு இடத்தைக் கொடுத்தேன். எதேற்சையாக அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்க்கவும் நேர்ந்தது, அவளும் அதேபோன்று என்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். கடைக்காரரிடம் சிரித்தபடி பொருட்களை கேட்டுக்கொண்டே நின்ற அவள் முகம் அத்தோடு மெதுமெதுவாக மாறவும் தொடங்கியது. பின்னர் அவள் ஏதும் பேசமுடியாமலே அக்கடையில் வாங்கிய பொருட்களோடு அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றாள். பார்ப்பதற்கோ கொஞ்சம் சதை இட்டிருந்தாள் அந்தப் பெண். அவள் வீடு அந்தக் கடையின் முன்பே இருந்ததை, பாதி திறந்திருந்த கேட்றின் இடையில் நின்றிருந்த குட்டிக் குழந்தை "உம்மி" என அவளை நோக்கி அழைத்ததையும் வைத்தும் அறிந்துகொண்டேன்.

அவள் உள்ளே நுழைந்து கேற்றை சாத்தும் முன்பே என்னையே பார்த்தபடி கேற்றை இழுத்து சாத்திக்கொண்டிருந்தாள். அவளின் நீலநிற கண்கள் சிவந்துகொண்டே செல்கையில் கேற்முற்றாக மூடிக்கொண்டது.

'எனக்குள் இருந்த வலிகள்தானே அவளுக்குள்ளும் இருந்திருக்கும்' என அவள் முகத்தை வைத்தே அவ்வினாடியில் உணர்வுகள் உடைய உறைந்து போய் நின்றிருந்தேன்.

அன்று அவள் குரலும் என் குரலும் எச்சந்தர்ப்பத்திலும் ஒலிராமலே இறுதிவரை ஊமையாகவே வாழ்ந்து ... சிறு சிறு புன்னகையுடனே பேசி டாவடிச்ச அந்தக் காதலோ, இன்று கண்ணீருடன் அவ் வீதியில் அனாதையாகி பரிதாபமாகவே உலா வுகிறது...

(முற்றும்...)

# குறள் இன்பம் 2G

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத் தொடர்.**

**பசப்பு உறு பருவரல்!**

திருக்குறளின் 119 ஆவது அதிகாரம் "பசப்புறு பருவரல்" என்ற தலைப்பில் உள்ளது. பசப்புறு பருவரல் என்றால் நிற வேறுபாட்டால் வருந்துதல் ஆகும். அதாவது, கணவன் அல்லது காதலன் பிரிந்து சென்றிருப்பதால், உள்ளத்தில் உண்டான துன்பத்தினால், உணவு உட்கொள்ளாமல், உறக்கம் இல்லாமல் அவனையே நினைத்து அழுது வருந்திக்கொண்டிருக்கும் மனைவியின் அல்லது காதலியின் உடல் மெலிந்து, உடலின் இயற்கையான நிறம் மாறி வருந்துதல் ஆகும். இது பெண்களை மட்டுமே பீடிக்கும் நோயாகும். இந்த நோயால் அவதியுறும் பெண்களின் உடல் பசிய மஞ்சள் நிறமாக மாறிவிடும். இது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் "பசலை நோய்" என்றும் "பசப்பு" என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இதனைத் தேமல் என்றும் அழைப்பார்கள். தேமல் இரண்டு வகைப்படும். ஒன்று மேற் கூறப்பட்ட பசலை நோயின் அறிகுறியான தேமல். மற்றையது, பிரிவுத் துன்பத்தின் காரணமாக அல்லாமல், உடல் அழகின் காரணமாக ஏற்படும் தேமல். அது "அழகுத் தேமல்" என்று அழைக்கப்படுகிறது.

திருக்குறளில் மட்டுமன்றி, நாலடியார், ஐந்திணை எழுபது ஆகிய சங்கமருவிய கால இலக்கியங்களிலும் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுனூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, முல்லைப் பாட்டு முதலிய சங்க இலக்கியங்களிலும் பசலை நோய் பற்றிய அழகான பதிவுகளைக் காணலாம்.

**"அவருக்குப் போய் வர இசைந்தேன்!**
**எவருக்கு நோய்என உரைப்பேன்?"**

நல்லதொரு நோக்கத்திற்காக அவன் அவளைப் பிரிந்துசெல்ல வேண்டிய நிலைமை வந்தது. அதுவரை பிரிவின் துயரை அனுபவித்தறியாத அவளும் பிரிவின் தேவை கருதி அதற்குச் சம்மதம் தெரிவித்தாள். ஆனால், அவன் பிரிந்து சென்ற நாள் முதல் ஒவ்வொரு கணமும் அந்தப் பிரிவின் துயரால் படுகின்ற அவஸ்தையை அவளால் தாங்க முடியவில்லை. எனினும் அவரின் வரவால் அந்தத் துயர் நீங்கிவிடும் என்ற நம்பிக்கையால் தாங்கிக்கொண்டிருந்தாள். ஆனால், உள்ளத்து உணர்வு உடலில் பிரதிபலிக்கத் தொடங்கியது. உடல் மெலிந்துகொண்டு வந்தது. உடலின் நிறம் திரிபடைந்து நின்றது. கண்கள் பொலிவிழந்து போயின. பசலை நோய் அவளைப் பற்றிக் கொண்டது. இவ்வாறு தனக்கு நேர்ந்திருக்கும் இடரைப்பற்றி எவருக்கும் சொல்ல முடியாமல் அவள் தவித்தாள். தானே அவரைப் போய்வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டு, இப்போது தானே நோயில் வருந்துவதை யாரிடம் போய்ச் சொல்ல முடியும் என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொள்கிறாள். சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருக்கும் தனது தவிப்பை யாரிடமாவது எப்படியாவது, சொல்லி ஆறுதல் பெறுவதற்கு நினைக்கிறாள்.

**"நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்**
**பண்புயார்க்கு உரைக்கோ பிற" (1181)**

என்னை விரும்பி தன் அன்பை எனக்குத் தந்த என் காதலர் என்னை விட்டுப் பிரிவதற்கு நானே சம்மதம் கொடுத்தேன். ஆனால், இப்போது அவரின் பிரிவால் பசலை நோயில் தவிக்கும் எனது நிலைமையை யாரிடம் போய்ச் சொல்வேன்?

**அவர்தந்த நோய், அதுவே பெருமை!**

பசலை நோயினால் அவள் படும் துயர்கண்டு அதனை ஆற்றுவதற்கு என்ன வழி என்று ஆலோசிப்பதற்கு அவளின் தோழி முன்வருகிறாள். ஆனால், அவளோ தனது காதலர் தனக்குக் கொடுத்த இந்தப் பசலை நோயை ஏன் மறைக்க வேண்டும் என்று நினைக்கிறாள். மாறாக அந்த நோயின் அறிகுறிகள் தன் உடலில் தெரிவதை



மற்றவர்கள் கண்டுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறாள். தனது உடலில் ஓரிடத்தில் தொடங்கி, ஒவ்வோரிடமும் ஊர்ந்து சென்று, உடலெங்கும் பரவுகின்ற இந்தப் பசலை நோயைத் தந்தவர் அவர் என்பதால், அது பெருமைக்கு உரியது. மறைப்பதற்கு உரியதல்ல என்று பெருமிதம் கொள்கிறாள்.

இது அக்காலப் பெண்களிடம் மட்டுமல்ல, இக்காலப் பெண்களிடமும் இருக்கின்ற இனிமையான பண்புதான்! திருமணம் முடித்த புதில் பெண்களின் நடை, உடை பாவனைகளில் ஒருவித உற்சாகக் களிப்பு இருக்கும். சின்னச்சின்ன விடயங்களில்கூட, உள்ளத்தில் சிறகடிக்கும் பறவையாய் மகிழ்வார்கள். தமது மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவார்கள். உதாரணமாக தமது நெற்றியின் உச்சியில் குங்குமத் திலகம் இடுகிறார்கள் என்றால், அதைக்கூட மற்றவர்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.தோழிகளிடம் கணவரைப் பற்றி நாணத்துடன்பெருமையாகப் பேசுவார்கள். அவரின் வரவுக்காகத் தவிப்பதையும் வந்தபின்னர் அவரோடு மகிழ்வாக இருப்பதையும் வீட்டிலுள்ளோர் தெரிந்து கொள்ளக்கூடியதாக நடப்பார்கள். ஆனால் தாங்கள் எதையும் அறியாது செய்வதுபோலச் செய்வார்கள். இவற்றிலெல்லாம் அவர்கள் உளமார இன்புற்று மகிழ்வார்கள். உலகில் உள்ள எல்லாப் பெண்களுக்கும் இந்த உணர்வு பொதுவானதுதான், ஆனால் நடைமுறைகளும் செயல் வகைகளும் மட்டுமே வேறானவையாக இருக்கும். அவ்வாறே, இன்பத்தில் மட்டுமல்ல பிரிவின் துயரை அனுபவிக்கும்போதும், தாங்கள் உள்ளத்தால் ஒன்றாகவும் உடலால் மட்டுமே பிரிந்திருப்பதாகவும் எல்லோருக்கும் காட்டிக் கொள்வதில் பெண்கள் எப்போதும் பெருமிதம் கொள்பவர்கள் என்பதை வெளிப்படுத்தும் குறள் இதுவாகும்.

**"அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்**
**மேனிமேல் ஊரும் பசப்பு" (1182)**

அவரின் பிரிவின் காரணமாக எனது உடலில் பரவியுள்ள பசலை நோய் அவர் எனக்குத் தந்தது என்ற பெருமைக் குரியது. (அதனால் அதனை மறைக்க வேண்டியதில்லை) என்பது இதன் கருத்து.

**அவர் கொண்டதும் கொடுத்ததும்!**

கணவரைக் குற்றம் சாட்டிச் சொல்வதைப்போலச் சொல்லி, அவருக்கும் தனக்கும் இடையில் இருக்கும் ஆழ்ந்த காதலை மற்றவர்களிடம் வெளிப்படுத்தி இன்புறுவதும் பெண்களின் தனித்துவப் பண்புகளில் ஒன்றுதான்.

இங்கே, இவள் தனக்கும் அவருக்கும் இடையில் வரவு செலவுக் கணக்குப் பார்ப்பதைப் போல ஒரு விடயத்தைத் தோழியிடம் சொல்கிறாள். தன்னைப் பிரிந்து சென்ற கணவர் தன்னிடம் இருந்து நல்லவற்றை எடுத்துக் கொண்டு, தீயவற்றை மட்டும் தனக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார் என்கிறாள்.

அவர் அவளிடம் இருந்து எவற்றை எடுத்துச் சென்றார்? அவளது உடல் அழகையும் அவளின் நாணம் என்ற குணத்தையும்தான். ஏன் இப்படிச் சொல்கிறாள்? பிரிவுத் துயரால் அவளது உடலின் அழகு மறைந்துவிட்டது. பசலை நோய் படர்ந்துவிட்டது. முன்பெல்லாம் கண்டவரோடெல்லாம் கதைக்க மாட்டாள். மற்றவர்கள் தன் அழகைக் காணும்படி உடையணியமாட்டாள். எவருடன் பேசும்போதும் நாணம் அவளுக்குக் கடிவாளம் போடும். தயங்கித் தயங்கியே பேசுவாள். ஆனால், இப்போது தனது பசலைநோயை மறைக்காமல் வெளிப்படுத்துகிறாள்.

அவர்தான் அவளிடம் இருந்து அவளின் அழகையும் நாணத்தையும் எடுத்துச் சென்றுவிட்டாரே! தன் கணவரைப் பிரிந்து வாடுவதை யார் அறிந்தாலும் பறவாயில்லை என்று நினைக்கிறாள். ஏன் இப்படி? தங்களது அன்பின் அடையாளமாகத்தானே, தனது உள்ளத்திற்குக் காதல் நோயையும் அதன்மூலம் உடலுக்கு பசலையையும் அவர் தந்து விட்டுச் சென்றிருக்கிறார். அதனால் தனது நிலைமை மற்றவர்களுக்குத் தெரிய வருவதில் அவள் இன்பமும் பெருமையும் கொள்கிறாள்.

இப்படியான காட்சியை நமக்குக் காட்டுகிறது இந்தக் குறள்.

**"சாயலும் நாணும் அவர் கொண்டார் கைம்மாறா**
**நோயும் பசலையும் தந்து" (1183)**

எனக்கு காதல் நோயையும் பசலையையும் தந்துவிட்டு அவற்றிற்கு கைமாறாக எனது அழகிய நிறத்தையும் நாணம் என்ற குணத்தையும் அவர் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார், என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்தாகும்.

**(தொடரும்)**

# அனுபவமே

ஏட்டுச் சுரைக்காய்
கறிக்கு உதவிடுமா
கத்தரிக்காய் என்றிட்டால்
பத்தியம் முறிந்திடுமா

வாய்ப் பேச்சும் வாசித்த எழுத்தும்
வடிச்சுக் கொட்டிடுமா
வயிறு நிரம்பிடுமா

ஆத்தங்கரை நின்னுட்டு
அட்ரா நீச்சலன்னா
அக்கரை அடையலாமா
முத்திரை பதிக்கலாமா
வழிபல வலுவாக்கும்

நெளிவான ஆயுதம்
தெளிவை அறிவித்திடும்
துல்லிய ஒளி விளக்கு



வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

# அவள் என் தோழி

சுருக்கமாக கூறின்
அவள் இரத்த சொந்தமல்ல
உருக்கமாக கூறின்
அவள் உடன்பிறப்பும் அல்ல

சில ரணங்கள் ஆறாதவை
ஆனாலும்
ஆத்ம ஸ்பரிசங்களில்
வருடும் அவள் அன்பை
ஆயிரம் ஆண்டுகள்
சேமிக்கேனடி
ஆயுள் அப்படியில்லை

ஆற்றிட வந்த
தேவமருந்தாகினாள்

அவள் தாயாக வந்தாள்
எந்தன் ஆருயிர் காத்தாள்
அவள் ஆதரித்து இருந்தாள்
எந்தன் ஆத்மத்தில்
உறைந்தாள்

யாருமில்லா தீவில்
நடமாட வித்தகி என்றிருந்தேன்
ஆனால் இனிமேலும்
அவளில்லா நாட்களில்
நானில்லை என்பேன்

வெளிப்படையா தெரியா
அவளின் அன்பதை
வெல்லமாக திருடும்
சிறுகுழந்தையாகிறேன்

எந்தன் வாழ்வின்
எல்லை வரை நீ வேண்டும்
இது ஆசையல்ல
எந்தன் பேராசை

இசை



# தும்பி

என்னவோர் அதிசயம் எண்ணி
வியந்தேன்
அசைந்தும் அசையாமல்
இறக்கைகள்
விரிந்திடும்

எண்ணமெல்லாம் மறந்து
இன்பத்தில்
மிதந்திடும்
கையில் அகப்படாமல் காற்றாய்
பறந்திடும்

வான ஊர்தி போல்
வாகாய் சுற்றிடும்
வட்டம் இட்டுமே சிட்டாய்
மகிழ்ந்திடும்

ஒய்வாய் இருந்திட வேண்டாம்
என்பதாய்
உயர்ந்த சேதியை சொல்லி
மறைந்திடும்

கையில் பிடித்திட கொள்ளை
ஆசையே
கண்டு பயந்துமே
அஞ்சி ஓடிடும்



யோ. யேசு

# மறதியே வா

த.செல்வா



மறதியே வா
எந்தன் கடந்த காலத்தை மறக்கும்
பாதையைக் காட்டு

மறதி ஒரு மா மருந்து
நினைவைப் பெருக்குவதைப் போல்
மறதியைத் திறக்கும்
திறப்பைத் தேடுகிறேன் இறைவா
இந்த வாழ்விலிருந்து
இன்னொரு வாழ்வை எப்படித்
தொழுவேன்

முகங்களின் முகவரியை மறக்க
குரல்களின் இசையினை மறக்க
மெய்மறந்த பொழுதுகளை மறக்க
ஏங்கிய கணங்களை மறக்க
சேமித்த ஆசைகளை மறக்க
கற்றுத்தா காலமே

இல்லையேல் நினைத்ததை
இணைத்திடச் சொல்லித்தா
நினைவுக்கும் மறதிக்கும் இடையில்
வாழ்தல் தாங்கா துயரல்லவா

நமது வாழ்வின் இலட்சியம்
நமது வாழ்வின்
இலட்சியங்களை அடைவது

அவ் இலட்சியத்தில்
இருந்து தவறினால்
நமது வாழ்வு
அர்த்தமற்றதாகி விடும்
காதல் வலியைக் கூட
தூக்கிப்போட்டு விட்டு
கடந்து விடலாம்

எமது வாழ்வின்
இலட்சியத்தை
அடையாமல்

தோற்று விடுவது
வலிகளிலும் கொடிய
வலியாகும்

சில உணர்ச்சியற்ற
மனிதர்களுக்கு
வலிக்காது



சனா
ஒட்டுசுட்டான்

# வலி

# யுத்த களமா? கடமையா?

தாட்ஷாவர்மா



யுத்த களத்தில் சட்டத்தை
மதிக்கவேண்டியவர்களுக்கும்
நாளைய சமுதாயத்தை
உருவாக்கவேண்டியவர்களுக்கும்
மத்தியில் உன்கடமையை
புகைப்படங்களாக எடுக்கிறாயே
எதற்காக? நாளைய சமுதாயம்
சீரழியவா
அல்லது உன் கடமையென்றா
சொல்?

# உணவுக்கட்டுப்பாடும் உடற்பயிற்சிகளும்

‘விடா முயற்சி, விஸ்வரூப வெற்றி’ என்பது வேறு எந்த விடயத்துக்குப் பொருந்துகிறதோ இல்லையோ... எடைக்குறைப்புப் பயணத்துக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். எடைக்குறைப்பு முயற்சியில் இருப்பதாகச் சொல்லும் பலரை நீங்கள் அன்றாட வாழ்வில் சந்திப்பீர்கள்... தினம் தினம் அவர்களது தோற்றத்தில் நீங்கள் பார்க்கும் மாற்றங்கள் உங்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தலாம். ‘எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்’ என உங்களைத் தொடர்ந்து ஆச்சரியப்படுத்தும் அந்த நபர், திடீரென ஒரு நாள் மீண்டும் ஓர் ஆச்சரியத்தில் ஆழ்த்துவார். அதுவும் ‘எப்படி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்’ ஸ்டைலில்தான் இருக்கும். அதாவது மீண்டும் ‘பழைய பன்னீர்ச்செல்வமாக’ உங்கள்முன் நிற்பார். “டயட்டெல்லாம் ஒத்துவரலீங்க... தொடர்ச்சியா ஃபாலோ பண்ண முடியலை. அதான்.” என்று சுயவிளக்கமும் தருவார்.



எடைக் குறைப்பு முயற்சியில் இறங்கும் பலருக்கும் இதுதான் நிதர்சனமாக இருக்கிறது. எடைக் குறைப்பு முயற்சி என்பது காலத்துக்கும் தொடரப்பட வேண்டியதா அதில் ஏன் எல்லோராலும் தாக்குப்பிடிக்க முடிவதில்லை..?

எடையைக் குறைக்கும் முயற்சிகளில் இறங்கி, வெற்றியைத் தொடுவதுடன், தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வோர் வெறும் 20 சதவிகிதத்தினர் மட்டுமே என்கிறது ஆய்வு. அப்படியானால் யாரெல்லாம் இந்த முயற்சிகளில் தோற்றுப் போகிறார்கள்..?

எடைக்குறைப்பின் பின்னணியில் உள்ள அறிவியல் புரியாமல், கலோரி குறைவான உணவுகளைச் சாப்பிட்டால் சீக்கிரம் எடை குறையும் என நம்பி, அப்படிப்பட்ட உணவுகளைச் சாப்பிடுவோர்...

உணவுக்கட்டுப்பாடும் உடற்பயிற்சிகளும்... ஆயுளுக்கும் தொடர வேண்டிய விடயங்களா?

தனக்கேற்ற உணவுக்கட்டுப்பாட்டைத் தெரிந்துகொண்டு பின்பற்றாமல், யார் யாரோ சொல்வதையும் பிரபலங்களின் லைஃப் ஸ்டைலையும் பின்பற்றுவோர்...

ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பின்பற்றாமல், வெறுமனே விதிகளை மட்டும் பின்பற்றுவோர்... அதாவது, வாழ்வியல் மாற்றத்தைப் பின்பற்றுவதில் இவர்களது கவனம் குறைவாக இருக்கும். அதனால் உடல் எடையை ஒரே சீராகத் தக்க வைப்பது இவர்களுக்கு சிரமமாக இருக்கும்.

முயற்சியில் தோற்காமலிருக்க என்னதான் செய்ய வேண்டும்?

உங்கள் வயது, உயரம், உடல் நலத்துக்கேற்ற சரியான டயட் பிளானை நிபுணரின் ஆலோசனையோடு தேர்ந்தெடுக்க வேண்டும்.

சாப்பிடாமல் இருப்பதால் எடையைக் குறைக்க முடியாது. சரியான நேரத்துக்கு சரியான உணவைச் சாப்பிட வேண்டும்.

உணவுக்கட்டுப்பாட்டைப் பின்பற்றுவதில் அசாத்திய மன உறுதி வேண்டும். ‘ஒருநாள் சாப்பிட்டா ஒண்ணும் ஆகிடாது’ என்ற எண்ணம் தலைதூக்க அனுமதிக்கவே கூடாது.

மனதார சாப்பிடும் வழக்கத்தைப் பின்பற்ற வேண்டும் (‘மனதார சாப்பிடுவது’ பற்றி இதே பகுதியில் முந்தைய அத்தியாயத்தில் பேசியிருக்கிறோம்).

உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சிகளும். ஆயுளுக்கும் தொடர வேண்டிய விடயங்களா?

எப்போது, என்ன, எவ்வளவு சாப்பிடுகிறீர்கள் என்பதைப் பதிவு செய்யவும்.

தினமும் உடற்பயிற்சிக்கு ஒரு மணி நேரமாவது ஒதுக்கவும்.

உங்கள் எடை ஏறுகிறதா என்பதைக் கண்காணிக்கவும்.

போதுமான அளவு தூக்கம் இருப்பதை உறுதிசெய்யவும்.

ஸ்ட்ரெஸ் இல்லாமல் வாழ அல்லது அதைச் சமாளிக்கப் பழக வேண்டும்.

இவற்றையெல்லாம் பின்பற்ற ஆரம்பித்த அடுத்த நாளே பலனை எதிர்பார்க்காமல், இதுதான் ஆரோக்கியத்துக்கான வாழ்க்கை முறை எனத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

தவிர, உடல் எடையைத் தக்க வைப்பது என்பது அவ்வளவு கடினமானதெல்லாம் இல்லை என்கின்றன ஆய்வுகள். எடைக்

குறைப்பு முயற்சியை 2 முதல் 5 ஆண்டுகள் பின்பற்றிப் பழகிவிட்டால் அது அவர்களது வாழ்க்கை முறையாக மாறியிருக்கும். ■



# அலட்சியம் ஆபத்தானது சருமத்தைப் பாதிக்கும் படர்தாமரை



உடல் பருமனாக உள்ளவர்கள், நீரிழிவு நோய் உடையவர்கள், நோய் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளது. இது நாய், பூனையால்கூட மனிதர்களுக்குப் பரவலாம்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரையும் பாதிக்கக்கூடிய சரும நோயாக படர்தாமரை உள்ளது. தொற்றின் வீரியத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டால், உடல் முழுவதும் பரவி எரிச்சலை உண்டாக்கிவிடும். படர்தாமரையால் பாதிக்கப்பட்ட பலரும் தொற்று தீவிரமடைந்த பிறகே மருத்துவரை அணுகுகிறார்கள். ஆரம்பத்தில் சாதாரணமான நோயென்று அலட்சியப்படுத்துவதால், தொற்றின் பின்விளைவுகள் மோசமாவதுடன் அதைக் குணப்படுத்தவும் நீண்டகாலம் ஆகிறது.

வெப்பம், வியர்வை போன்ற காரணங்களால் ஏற்படும் படர்தாமரை ஆண்,பெண் இருவருக்கும் எளிதாக தொற்றிக் கொள்கிறது. குழந்தைகளைப் பாதிக்கக்கூடியதாகவும் உள்ளது.

“அதிகமான வியர்வை வெளியேறுதல், இறுக்கமான ஆடைகளை அணிவது உள்ளிட்டவற்றால் படர்தாமரை எளிதாகப் பரவுகிறது. பெயருக்கு ஏற்றாற்போல், சருமத்தின் மேல் பகுதியில் பரவக்கூடிய ஒரு வகையான டெர்மடோஃபைட் (Dermatophyte) கிருமியால் உருவாகக்கூடிய நோய் இது. ஆரம்பத்தில் சிறு சிவப்புப் புள்ளியாக வட்ட வடிவில் இருந்தாலும் வேகமாகப் பரவக்கூடிய இயல்பு கொண்டது. இதன் ஓரங்களில் சிறிய செதில்கள் காணப்படும். ஓரங்கள் தடித்தும் இருக்கலாம். தொற்றின் வீரியம் அதிகரிக்கும்போது சிறிய சீழ் கொப்புளங்களும் காணப்படலாம்.

அதிகமான வியர்வை, இறுக்கமான ஆடைகளை அணிவது, நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவரின் சோப், டவல் போன்றவற்றைப் பயன்படுத்துவது, நீண்ட நேரமாக தண்ணீரில் இருப்பது போன்றவை படர்தாமரை ஏற்படுவதற்கான காரணங்கள். மேலும், உடல் பருமனாக உள்ளவர்கள், சர்க்கரை நோய் உடையவர்கள், நோய் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்களுக்கும் இந்த நோய் வர வாய்ப்புள்ளது. இது நாய், பூனையால்கூட மனிதர்களுக்குப் பரவலாம். ஏற்கெனவே படர்தாமரை உள்ளவரிடம் இருந்து மற்றவர்களுக்கு 1-3 வாரங்களில் பரவக்கூடும்?

படர்தாமரையானது தொடை, பிறப்புறுப்பு, அக்குள், கால் நகங்கள், இடுக்குகளில் பரவும். இரண்டு வேளை குளிப்பது, உலர வைத்த ஆடைகள், வெயில் காலங்களில் காட்டன் ஆடைகள் அணிவது, உடல் பருமனைக் குறைப்பதன் மூலமாக மீண்டும் தொற்று ஏற்படாமல் தவிர்க்கலாம். வீட்டில் யாராவது ஒருவருக்கு படர்தாமரை ஏற்பட்டுவிட்டால் அவரது சோப் மற்றும் துணிகளை மற்றவர்கள் பயன்படுத்துவதை முற்றுமாகத் தவிர்ப்பதும் பாதிக்கப்பட்டவரின் துணிகளைத் தனியாக உலர வைப்பதன் மூலமாகவும் இதன் பரவுதலைத் தடுக்கலாம்.

படர்தாமரைத் தொற்று இருப்பது தெரிய வந்தால், உடனடியாக சரும மருத்துவரை அணுகி உரிய ஆலோசனை பெற வேண்டும். அது தவிர நீண்ட நாட்கள் ஆகியும் படர்தாமரைத் தொற்று குறையாமல் அதன் தொந்தரவு நீடித்தால், வேறு சில பரிசோதனைகள் மூலமாக கிருமியின் வகையைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சையை வழங்குவார்கள்.

மருத்துவர் ஆலோசனை பெறாமல் அனுமதியின்றி மருந்துக்கடைகளில் வாங்கிப் பயன்படுத்தும் பொதுவான மருந்துகள் மூலமாக நோயின் தன்மை குறையாது அதன் வீரியம் அதிகரிக்கவே வாய்ப்புண்டு. படர்தாமரைத் தொற்று இருப்பவர்கள், கட்டாயமாக இரண்டு வேளை குளிப்பதும் நன்கு துவைத்த ஆடைகளைப் பயன்படுத்துவதும் நல்லது. அத்துடன் ஜீன்ஸ் போன்ற இறுக்கமான ஆடையைத் தவிர்த்து, தளர்வான காட்டன் துணிகளையே அணிய வேண்டும்.

அதேசமயம், படர்தாமரைத் தொற்றினை நினைத்து பலரும் மிகவும் கவலையும் அச்சமும் கொள்கின்றனர். படர்தாமரை தீவிரமான தொற்று என்பது உண்மைதான். எனினும் தொற்று ஏற்பட்டதும் மருத்துவர் ஆலோசனையின்படி சிகிச்சை எடுத்துக் கொண்டால் எளிதில் குணம் பெறலாம். சரியான சிகிச்சையும் சுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதும் படர்தாமரையை வெல்வதற்கான எளிய வழிகள். ■

# வடக்கின் ஓர் அடையாளம்

# வடகடல் உப்பு ஆலை




**கருவாடு உப்பு பெற்றுக்கொள்ள தொடர்புகளுக்கு**

**0777133543**

**0767833799**

# பிம்புரத்தேவ குளம்

வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில் அரலகங்விலவில் பகுதியில் அமைந்துள்ளது. ஓர் அழகிய நீர்த்தேக்கமாக “பிம்புரத்தேவ குளம்” காணப்படுகின்றது.

இது பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படும் பசுமையானதும் பசுமையின் அற்புதமான காட்சிகளால் சூழப்பட்ட ஒரு அழகான ஏரியாகும். இது ‘மாதுரு ஓயா’ அணையிலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.





எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்

இப்பகுதி பொலன்னறுவை மாவட்டத்தில் இருந்து சுமார் 43 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து பிம்புரத்தேவ குளம் சுமார் 260 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இப்பகுதியை அண்மித்ததாக பல்வேறு சுற்றுலாத் தளங்கள் காணப்படுகின்றது இங்கிருந்து 35 கிலோமீற்றர் தூரத்தில் “மகா ஓயா சுடுநீர்க் கிணறும்” அதேபோன்று மிக அண்மையில் “மாதுரு ஓயா தேசிய பூங்கா”வும் 8.5 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது.

நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளில் இருந்து வருபவர்களுக்கு ஓர் மையப் பகுதியாக இப்பிரதேசம் காணப்படுகிறது.

இந்த ஏரியின் கட்டுமானப் பணிகள் 1969 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வெறும் 03 மாதங்கள் என்ற மிகக் குறுகிய காலத்தில் 40,000 சதுர அடிக்கும் அதிகமான பரப்பளவை ஏரியாகக் கட்டினார்கள். கட்டுமானப் பணியின் போது 70க்கும் மேற்பட்ட மலைப்பாம்புகள் இங்கு பிடிபட்டதால் “பிம்புரத்தேவ” என்ற பெயர் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, இவ் ஏரி மூலமாக சோரா ஏரி, அரலகங்வில ஏரி, நெலும் ஏரி, இப்பன் ஏரி, மணமலா ஏரி, பாசி ஏரி, இகுரு ஏரி, வெள்ளிக் குளம் போன்ற பல ஏரிகள் இந்த ஓடையின் மூலம் 4,000 ஏக்கர் நெற்பயிர்களுக்கு நீர் வழங்குகின்றன.

2018 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ‘மதகுகள்’ இந்த ஏரிக்கு ஒரு வித்தியாசமான அழகையும் ஒட்டுமொத்த சுற்றுலாப் பயணிகளின் கவனத்தையும் மேலும் ஈர்க்கச் செய்கின்றன. இங்குள்ள அழகு எவ்வளவோ இருந்தாலும், ஒருவர் வேறு நாட்டிற்குச் சென்றதைப் போல உணரத் தொடங்குகின்றார்கள். பல சுற்றுலாப் பயணிகள் இந்த இடத்தை தங்கள் உல்லாசப் பயணத்தின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளனர்.

எனவே நீங்கள் இந்த இடத்திற்கு செல்லவில்லை என்றால் தாமதிக்க வேண்டாம். ஆனால், அதன் அழகைக் கெடுக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம் என்பதை நினைவூட்டுகிறேன். குறிப்பாக நீர்நிலைகள் காணப்படும் பகுதியில் பொலித்தீன் பொருட்களையோ அல்லது கழிவுகளையும் நீர்நிலைகளில் வீசும் போது அது மாசுபடுகின்றது காட்டு விலங்குகளும் நீர்வாழ் உயிரினங்களும் மிகப்பெரும் ஆபத்தை உண்டாக்க நாம் செய்யும் சிறு தவறு காரணமாக அமைகின்றது ஆகவே இப்பகுதிகளுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள விதிமுறைகளையும் கவனத்தில் கொண்டு செயல்படுவது காலத்தின் மிகப்பெரும் தேவையாகக் காணப்படுகின்றது.

மாலை நேரங்களில் யானைகள் தோன்றுவது மிகவும் பொதுவானது. அதனையும் கவனத்தில் கொண்டு பயணிக்க வேண்டும் மேலும், இந்த ஏரியில் குளிக்கும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மதகுகளின் முன்பக்க பகுதிகள் நீர் வடிந்த நிலையில் காணப்படுவதால் அப்பகுதியில் குளிப்பது மிகவும் பாதுகாப்பானது. அதையும் தாண்டி மதகுகளுக்கு பின்பகுதியில் பரந்த பரப்பளவைக் கொண்ட பகுதியில் நீராடுவதும் குளிப்பதும் மிகவும் ஆபத்தானதாகக் காணப்படுகின்றது அப்பகுதியில் முழுமையான முறையில் நீச்சல் தெரிந்தவர்கள் (10 அடிக்கு மேல் ஆழம் கொண்டது) குளிப்பது சாலச் சிறந்தது. குறிப்பாக, மழைக்காலங்களில் இப்பகுதியில் நீர்நிலை மிகவும் அதிகமாகக் காணப்படும் இப்பகுதியை தரிசிக்க வருபவர்கள் மழைக்காலங்களில் இதனைப் பார்வையிடுவதால் தான் இதன் அழகை முழுமையாக ரசிக்க முடியும். மழையற்ற காலப்பகுதிகளில் இங்கு நீர் வற்றிய நிலையில் காணப்படும் மதகுகளில் இருந்து நீர் வடிவதையும் அவதானிக்க முடியாத நிலை இங்கு தோன்றும். அதனுடன் இணைந்ததாக நீர் நிலைகள் சேறு படிந்ததாகக் காணப்படும்.

நீங்களும் பிம்புரத்தேவ ஏரியை பார்வையிடச் செல்வதாயின் உரிய காலப்பகுதியில் சென்று இதன் அழகை ரசிக்க முடியும் .செல்லும் பாதைகள் சிறப்பாக அமையப் பெற்றிருந்த போதிலும் குறிப்பிட்ட ஐந்து கிலோமீற்றருக்கு உட்பட்ட பாதை கிரவல் வீதியாகக் காணப்படுகின்றது. ஆகவே, முறையான முறையில் திட்டமிட்டு உங்களுடைய விடுமுறையை சிறப்பாக திட்டமிடுவீர்கள் என்று நம்புகின்றேன். ■

---

## உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க விழிப்புணர்வு

உள்ளூர் சந்தைக்கான உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை உற்பத்திகளுக்கான விழிப்புணர்வும் விவசாய உணவு உற்பத்திச் சந்தையும் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

ஜப்பான் அரசாங்க நிதியுதவியின் கீழ் ஜப்பான் நாட்டின் பீஸ் வெயின்ட் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் கிழக்கு பல்கலைக் கழக சித்த மருத்துவப் பிரிவு இணைந்து நடாத்திய இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பிரதம அதிதியாகவும் ஜப்பான் நாட்டு தூதுவர் கிடாக்கி மிஸிகோசு கௌரவ அதிதியாகவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ■





---

## ஏ.எச்.எம்.அன்சார் 38 வருட அரசசேவையில் இருந்து ஓய்வு

மருதமுனையின் முதல் நிர்வாக சேவை விசேட தர அதிகாரி ஏ.எச்.எம்.அன்சார் ஆசிரிய சேவையில் 6 வருடங்களும் நிர்வாக சேவையில் 32 வருடங்களுமாக 38 வருட அரச சேவையில் கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேவைகள், சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை, கிராமிய மின்சார அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, திறன் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு என்பற்றில் செயலாளராக சிறப்பாகக் கடமையாற்றி 2022-12-31 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

இவரது பதவிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தவர். அத்துடன் அமைச்சுகளின் கீழ் வருகின்ற வேலைத்திட்டங்களை பாகுபாடின்றி விகிதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்தளித்தவர். பெரும் தொகையான வீதிகள் புனரமைப்பு, மின்சார அபிவிருத்தி, சமூகசேவை அபிவிருத்தி மற்றும் வைத்தியசாலைகள் தரமுயர்த்தல், புனரமைத்தல், அபிவிருத்தி என்பவற்றில் அதிக அக்கறை காட்டி செயற்பட்டவர். பலரின் பதவி உயர்வுகள், நியமனங்கள் என பலரின் வாழ்வியலுக்கு வழிகாட்டியவர். ■



# தடுமாறும் பொருளாதாரமும்

# மின்கட்டண...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

ஆகஸ்ட் 2022 இல் இலங்கை மின்சாரக் கட்டணத்தை 75 சதவீதத்தால் உயர்த்தியது.

எவ்வாறாயினும், CEB தொடர்ந்து நஷ்டத்தைச் சந்தித்து வருவதாகவும் ஜனவரி 2023 இல், அமைச்சர்கள் அமைச்சரவை மற்றொரு கட்டண உயர்வை அங்கீகரித்தது.

PUCSL எந்தக் கட்டண மாற்றங்களையும் செயல்படுத்துவதற்கு முன் அங்கீகரிக்க வேண்டும்.

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த அமைச்சர் விஜேசேகர, மக்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கை வங்கி (BOC) கூடுதல் கடனாக ரூ. 22 பில்லியன் நிலக்கரி கொள்முதல் செய்ய, மின் கட்டண திருத்தத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய மின் கட்டண திருத்தம் பெப்ரவரி 16 முதல் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

"ஜனவரியில் நாம் கொண்டு வந்த பிரேரணையை ஜனவரியில் நடைமுறைப்படுத்தியிருந்தால், அது எமக்கு இலகுவாக இருந்திருக்கும். எவ்வாறாயினும், எவ்வாறான காலதாமதமான போதிலும் (இன்று) 16 ஆம் திகதி முதல் தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என நான் கருதுகின்றேன் என்றார்.



இலங்கை மின்சார சபையின் முன்னைய நஷ்டத்தை ஈடுசெய்யும் வகையில் இந்தக் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக வதந்திகளைப் பரப்புவதற்கு பலர் முயற்சித்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இந்தப் புதிய முறைமையின் செலவை ஈடுசெய்யவே முன்மொழியப்பட்டுள்ளதாகவும் வலியுறுத்தினார்.

"இந்தப் புதிய கட்டணத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய காரணம், கடன் மறுசீரமைப்பின் போது, CEB, Ceylon Petroleum Corporation (CPC) மற்றும் SriLankan Airlines போன்ற பொது நிறுவனங்களுக்கு திறைசேரியில் இருந்து நிதி வழங்க முடியாது என்று IMF இன் நிபந்தனை ஒன்று இருந்தது. அல்லது இங்கே மத்திய வங்கி", அவர் மேலும் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சாரம் வழங்குவதில் உள்ள செலவை ஈடுசெய்யும் வகையில் கட்டணத்தை வசூலிக்கும் முறை மின்சார சபையிடம் இல்லை என்றும் ஆனால் பல்வேறு அரசாங்கங்களின் கீழ், திறைசேரி செலவுக்கும் விதிக்கப்பட்ட கட்டணத்திற்கும் இடையிலான இடைவெளியை நிரப்பியது என்றும் விளக்கினார்.

"எதிர்காலத்தில் வேறு எந்த மின் கட்டண உயர்வும் இருக்கும் என்று நான் நம்பவில்லை. இந்த முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம், தடையில்லா மின்சார விநியோகத்தை தொடர்ந்தும் வழங்குவதற்கு எமது அரசாங்கம் நம்புகிறது" என அமைச்சர் விஜேசேகர வலியுறுத்தினார்.

மேலும், அடுத்த திருத்தங்களின் மூலம் மக்கள் மீதான சுமை குறையும் என்றும், மக்களின் மின் கட்டணம் குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபையின் 288 பில்லியன் ரூபா நட்டத்தை ஈடுகட்ட 66% கட்டண உயர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மாதத்திற்கு 90 யூனிட்டுகளுக்குக் குறைவாக எடுக்கும் சுமார் ஐந்து மில்லியன் மின்சார பயனர்களைக் கொண்டுள்ளது. இந்தக் கட்டண உயர்வு சுற்றுலா ஹோட்டல்கள் உள்ளிட்ட தொழில் துறை பிரிவையும் 150% அதிகரிக்கும். இவை அனைத்தும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளை மேலும் சீர்குலைக்கும்.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோன் உயர்வான் என்ற

ஔவையின் கூற்றை மின் கட்டணம் மறுதளிக்கிறது.

மின் கட்டண உயர்வு இலங்கையில் உள்ள அடிமட்ட ஏழைகளைப் பாதிக்க உள்ளது. மின்சாரத்தின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. உணவு, உடை, பேக்கரிப் பொருட்கள் ஆகியவற்றின் விலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது.

மின்கட்டண உயர்வு தொடர்பில் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து பல விலை அதிகரிப்புகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய மின் கட்டண உயர்வால் பேக்கரிப் பொருட்களின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் என பல பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். பெரும்பாலான பேக்கரி உற்பத்திகள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதால், மின் கட்டண உயர்வால் நஷ்டம் ஏற்படாத வகையில் உணவுப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உணவு உற்பத்திக்காக மின்சாரம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளதால் அதற்கான கட்டணத்தையும் வாடிக்கையாளர்களிடம் அறவிட வேண்டும் எனவும் உணவக உரிமையாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதே வேளை மின்கட்டண உயர்வால் நகல் பிரதி ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண உயர்வு காரணமாக இவ்வாறு நகல் பிரதியின் விலையை அதிகரிக்க நேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொத்துரொட்டி, பிரட் ரைஸ் ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் 74 இலட்சம் மின்பாவனையாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளின் ஒன்றிணைந்த சேவை சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் நிர்வாக முடக்கல் நடவடிக்கையில் ஈடுபட அவதானம் செலுத்தியுள்ளோம், மின்கட்டண அதிகரிப்பு நாட்டு மக்களுக்கு மரண தாக்குதலாக அமையும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை மின்சார சபை தனது நீண்ட கால நட்டத்தை ஈடுசெய்வதற்காக இவ்வருடத்தில் மேலதிகமாக 288 பில்லியன் ரூபாவை திரட்டிக் கொள்ள உத்தேசித்துள்ளது.

கடந்த ஐந்து மாத காலத்துக்குள் இரு முறை மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 66 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசாங்கம் உணர்வுபூர்வமாகச் செயற்படுவதில்லை. தன்னிச்சையாகச் செயற்படும் அரசுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும்.

தொழிற்சங்கங்களால் மாத்திரம் தனித்துச் செயற்பட முடியாது. மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து துறைமுகம், பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளை ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் நிர்வாக முடக்கல் நடவடிக்கையில் ஈடுபட எதிர்பார்த்துள்ளோம்.

தொழிற்சங்கப் போராட்டத்துக்கு நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமொன்றுக்கு மின் கட்டண உயர்வு வழிகோலியுள்ளது.

மத வழிபாட்டிடங்கள் சிலவற்றுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. அதிக வருமானம் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணத்தை அறவிட வேண்டும். அரச நிறுவனங்கள், அரசியல்வாதிகளின் நிலுவைகளை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் தொழில் துறை வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

■



# திட்டமிட்டு தூக்கப்பட்ட

## கோலி சேட்டன் சர்மா ஒப்புதல்

பிரபல தொலைக்காட்சியில் ரகசிய கேமரா இருப்பது தெரியாமலேயே இந்திய கிரிக்கெட்டின் பின்புறத்தில் நடைபெறும் நிறைய குளறுபடியான உண்மைகளை இந்திய சீனியர் கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் சேட்டன் சர்மா பேசியுள்ளது ஒட்டுமொத்த ரசிகர்களையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. குறிப்பாக, முழுமையாக ஃபிட்டாகாத வீரர்கள் ஊசிகளைப் போட்டுக் கொண்டு விளையாடுவதும் ஹர்திக் பாண்டியா போன்ற வீரர்கள் இந்திய அணியின் தேர்வு பற்றி தமது வீட்டுக்கே வந்து பேசியதாகவும் அவர் கூறியது சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் உச்சகட்டமாக கங்குலி - விராட் கோலி ஆகியோரிடையே விரிசல் என்று கடந்த வருடம் வதந்திகளாக மட்டுமே வந்த செய்திகளை தற்போது அவரால் 100% உறுதியாகியுள்ளது.



தனியார் செய்தி தொலைக்காட்சி நடத்திய ஸ்டிங் ஆப்ரேஷனில் விராட் கோலி, சௌரவ் கங்குலி இடையே நடந்த பிரச்சினைகள், வீரர்கள் ஊக்க மருந்து எடுத்துக்கொள்கிறார்கள் என பல்வேறு திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டிருந்தார்.

உலகக் கிண்ணப்போட்டியில் சம்பியனாக வில்லை என்பதற்காக விமர்சனங்களை சந்தித்த விராட் கோலி 2021 ஆம் ஆண்டு ரி20 உலகக் கிண்ணப் போட்டியுடன் ரி20 கப்டன்ஷிப் பதவியை இராஜினாமா செய்தாலும் ஒருநாள், டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்வதாக அறிவித்தார். ஆனால் அவரது தலைமையில் டுபாயில் பாகிஸ்தானிடம் முதன்முறையாக தோற்று படுதோல்வியைச் சந்தித்ததால் அதிருப்தியடைந்த தேர்வுக் குழுவினர் வெள்ளைப் பந்து கிரிக்கெட்டுக்கு 2 வெவ்வேறு கப்டன்கள் தேவையில்லை என்ற கண்ணோட்டத்தில் அவருடைய ஒருநாள் கப்டன் பதவியையும் பறித்து ரோகித் சர்மாவிடம் ஒப்படைத்தது.

அதனால் ஏமாற்றமடைந்த விராட் கோலி வெற்றிகரமான கப்டனாக இருந்த போதிலும் டெஸ்ட் அணியின் கப்டன் பதவியை இராஜினாமா செய்தார். அப்போது ரி20 கேப்டன்ஷிப் பதவியை இராஜினாமா செய்ய வேண்டாம் என்று விராட் கோலியிடம் கேட்டுக் கொண்டதாக சௌரவ் கங்குலி தெரிவித்தார். ஆனால் யாரும் தன்னிடம் அவ்வாறு கேட்டுக் கொள்ளவில்லை என்று மறுத்த விராட் கோலி மறுத்தார். இருப்பினும் உண்மையிலேயே சௌரவ் கங்குலி அவ்வாறு கேட்டுக் கொண்டதாக தெரிவித்த சேட்டன் சர்மா விராட் கோலி ஏன் பொய் பேசினார் என்பது புரியவில்லை என்று கூறியிருந்தார்.

“அதிலும் குறிப்பாக தாம் இல்லையென்றால் இந்தியாவில் ஒட்டுமொத்த கிரிக்கெட்டும் நின்று விடும் என்று விராட் கோலி நினைத்தார். ஆனால், அது எப்போதாவது நடைபெறுமா? ஏனெனில் வரலாற்றில் நம்முடைய சில நட்சத்திர வீரர்கள் வந்து விளையாடி விட்டு சென்றாலும் கிரிக்கெட் அதே நிலைமையில் தான் உள்ளது. எனவே விராட் கோலி அந்தச் சமயத்தில் தலைவர் கங்குலிக்கு பதிலடி கொடுக்க முயற்சித்தார். அது பெரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியது. குறிப்பாக விராட் கோலியின் செயல்பாடுகள் பி.சி.சிஐக்கு எதிராக ஒருவர் நடந்து கொள்வதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது”

“ஆனால் தலைவர் பி.சி.சி.ஐயை பிரதிபலிப்பவர் அல்லவா? அந்த சமயத்தில் தவறு யார் மீது இருந்தாலும் அது காலப்போக்கில் தீர்மானிக்கப்படும். ஆனால், அதற்காக விராட் கோலி பி.சி.சி.ஐயை தாக்கினார். இந்திய வீரர்கள் அதற்கு எதிராக இருந்தார்கள். ஏனெனில் அவ்வாறு செய்தால் தங்களது இடம் பறி போய்விடும் என்று அவர்கள் நினைத்தார்கள். அந்த இடத்தில் தலைவர் மீது தவறு இருந்தாலும் நீங்கள் அவர்களுடைய பதவிக்கான மரியாதை கொடுக்க வேண்டும்”

“அதனால் ரோகித் சர்மா தாமாக ஒருநாள் கப்டன்ஷிப் பொறுப்பேற்றார். அந்த சமயத்தில் ஈகோ சண்டை நடந்தது. குறிப்பாக, தமது கப்டன்ஷிப் பறிபோவதற்கு கங்குலி காரணம் என்று நினைத்த விராட் கோலி அவருக்கு பாடத்தைப் புகட்ட நினைத்தார். ஆனால் வெவ்வேறு கப்டன்கள் தேவையில்லை என்று தேர்வுக் குழுவினரான நாங்கள்தான் அந்த முடிவை எடுத்தோம். இருப்பினும் அவர் மீடியாவில் கங்குலி பற்றி அவ்வாறு பேசியது இறுதியில் அவருக்கே பிரச்சினையாக உருவெடுத்தது” என்று கூறினார். உடல் தகுதியை நிரூபிப்பதற்காக வீரர்கள் ஊசிகளைச் செலுத்திக் கொள்வார்கள் என்று இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவர் சேட்டன் சர்மா பரபரப்புக் குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

வீரர்கள் சிலர் 85 சதவீத உடல் தகுதியுடன் தான் இருப்பார்கள். மருத்துவ பரிசோதனையில் தோல்வி அடைந்தாலும்கூட, தாங்கள் விளையாட வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஒழுங்காக குனியக்கூடத் தெரியாது. அவருக்கு ஒன்று அல்லது இரண்டு பெரிய காயங்கள் ஏற்பட்டுள்ளன. மற்றபடி, 80 சதவீத உடல் தகுதியுடைய வீரர்கள், ஊசியை எடுத்துக் கொண்டு வந்து, தாங்கள் முழு உடல் தகுதியுடன் இருப்பதாகச்சொல்வார்கள். வலி மருந்தை வீரர்கள் சிலர் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அது போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையின் கீழ் வரும் என்பதை வீரர்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர்.

இதேபோன்று ஊசியைப் பயன்படுத்துவதால் போதை தடுப்பு நடவடிக்கையில் சிக்கிக் கொள்ள மாட்டோம் என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். இந்திய வீரர்கள் சூப்பர் ஸ்டார்கள். அவர்களுக்கு டொக்டருக்கா பஞ்சம் ஏற்படும்? போன் செய்தால் டொக்டர்கள் வீட்டிற்கே வந்து ஊசி போட்டுவிட்டு செல்லப் போகிறார்கள். பெரும்பாலும் ஊசியைச் செலுத்தி உடல் தகுதியை நிரூபிக்கும் வீரர்களிடம் அவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

ஆனால் கோலிக்கும், ரோஹித் சர்மாவுக்கும் இடையே பெரிய பிரச்சினை, பிளவு என்று ஏதும் இல்லை. எல்லாம் மீடியாக்களின் ஊகச் செய்தி தான். ஓரிடத்தில் மிகப்பெரும் 2 நட்சத்திரங்கள் இருக்கும்போது சிறதளவு ஈகோ இருக்கத்தான் செய்யும். இது அமிதாப் பச்சனுக்கும் தர்மேந்திராவுக்கும் இடையில் இருக்கும் ஈகோவைப் போன்றது. எதுவெல்லாம் கிடையாதோ அதுவெல்லாம் இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. உண்மையிலேயே விராட் கோலியும் ரோஹித் சர்மாவும் ஒருவருக்கொருவர் உதவிக்கரமாக செயல்பட்டனர். விராட் கோலி ரன் எடுக்கத் திணறியபோது, ரோஹித் ஆலோசனைகளை வழங்கினார். ரோஹித்தின் மோசமான தருணங்களில் கோலி உதவியாக இருந்தார். இந்த விவகாரம் இந்திய கிரிக்கெட்டில் புயலைக் கிளப்பி உள்ளது. ■



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 18.02.2023 அன்று வெளியிடப்பட்டது.